மாலைமணி

தேர்தல் மலர் . 1967

கோட்டாகுடி பெரியநாயக்கர்
ரவெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

வெற்றிச் சின்னம் உதயசூரியன்!

அணியுங்கள் உதயசூரியன் மோதிரத்தை!

டே. சம்பந்தன், 176/1, பெரியதெருவு, சென்னை-5

முழு விபரம் பின் அட்டையில் பார்க்கவும்.

தபால் மூலம்
1 வருடத்தில்
. எழுதவும்
. படிக்கவும்
. பேசவும்
GOVT. REGD.
ஆங்கிலம்
கற்றுக் கொடுக்கப்படும்
விபரங்கள் இலவசம்!
குமரன் இங்கிலீஷ் இன்ஸ்டிட்யூட்
திருப்பூர்-1
- அஸ்வனி -

PARAMOUNT

குறிப்பு: கேட்லாக் வேண்டுவோர் 25 காசு தபால் தலை அனுப்பவும்.

பொதுமக்கள் அனைவருக்கும் எங்களுடைய
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்கள் கண்ணைக் கவர்ந்து
எண்ணங் குளிரச் செய்யும்
எல்லா வகை ஜவுளிகளுக்கும்
மற்றும் B & C மில் துணிகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்.

ஹாஜியார்ஸன்ஸ்

மண்ணடி பஜார், சென்னை-1.

போன் : 26151

போன்: 26426

அழகுக்கு அழகூட்டும்
கண் கவர்

K. M. Md. ISMAIL
TRADE MARK
FAST COLOUR
புரு மார்க்கு
3,4/18 MANNADY ST., MADRAS-1

புரு மார்க்

★ கைலிகள்
★ கைக்குட்டைகள்
★ வேஷ்டிகள்

சாயத்திற்கு உத்திரவாதமுள்ளது.

தயாரிப்பாளர்கள் :
பர்மா லுங்கி எம்போரியம்
3, 4-18, மண்ணடி பஜார்,
மதராஸ்-1.

எல்லோருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

ஆடவர் பெண்டிர்
அனைவரின் நெஞ்சிலும்
நீக்கமற நிறைந்திருக்கும்
நிலையம்

கே. எம். எஸ்.
டெக்ஸ்டைல்ஸ்

புத்துணர்வு தரும்
புதிய டிசைன்களில்
கைத்தறி, மில் துணிகளுக்கு
சிறந்த இடம்

கே. எம். எஸ்.
டெக்ஸ்டைல்ஸ்

உரிமையாளர் : கே. எம். சீனிவாசன்
86, சாலைவிநாயகர் கோயில் தெரு,
சென்னை-1.

20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் நடந்த கொடுமைகளைப்
பாரீர்!
புத்தியில்லாத ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டினார்கள்!
வெளிநாடுகளில் பல்லாயிரம் கோடி கடன் வாங்கினார்கள்
உள்நாட்டிலும் நோட்டடித்து மலைபோல் குவித்தார்கள்!
இதனால் ரூபாய் மதிப்புக் குறைந்தது! நாட்டின் மானம் பறி போயிற்று!


அரிசி
படி 3 ரூ
விலைவாசி விஷம்போல்
உயர்ந்தது!
மனிதன் சோற்றுக்கு
நாயோடு போராடினான்
வறுமையால் நடுத்தர மக்களின்
தற்கொலை அதிகரித்தது.
படித்த பட்டதாரிகள்
வேலையின்றித் தவித்தார்கள்!


ஏர்பிடிக்கும் உழவன் கையிலே
அரிசிக் கூப்பனைத் தந்தார்கள்!
பட்டாடை நெய்த நெசவாளி!
குடும்பம் கட்டத்துணியின்றி தவித்தது!
வறுமையால் பெற்றக் குழந்தைகளை
கிணற்றில் தள்ளிக் கொன்றாள்!
பட்டினிச் சாவு
மலிந்தது!



29 ஆயிரம் கோடி செலவு செய்து எலிக்கறியைச் சாப்பிடச் சொன்னார்கள்

ஆனால் பணக்காரர்களோ கோயில் மாடுகளைப்போல் கொழுத்தனர்!

இருள் நீங்கிட இன்பம் பொங்கிட
உதயசூரியனுக்கே ஓட்டளியுங்கள்!



தமிழ் வாழ்ந்திட தரணி தழைத்திட

உதயசூரியனுக்கே ஓட்டளியுங்கள்!

விலை ரூபாய் ஒன்று.

மாலைமணி

மணி 9 15—1—67 ஒலி 11

தாழ்வு நீங்கட்டும்!

வாழ்வில் வளங்கொழிக்கட்டும்!

ஏழைகளின் இதயங்களிலே குடி இருக்கும் மக்கள் சக்தி படைத்த தி. மு. கழகம் தமிழகத்திலே எதிர்ப்பணி அமைத்து—

எதேச்சாதிகாரம் கொண்ட ஏழைகளின் வாழ்வைச் சுட்டுப் பொசுக்கிவரும் காங்கிரஸ் ஆட்சியை தேர்தலிலே எதிர்த்துப் போராடக் களம் அமைத்து விட்டது!

கழக வேட்பாளர்களையும், எதிர்ப்பு அணி நண்பர்களையும் தேர்தலிலே ஆதரித்து வெற்றி பெற வைப்பது பொதுமக்களின் கடமையாகும்!

தமிழகத்திலே கழக ஆட்சி அமையுமானல்—இல்லாமையை நீக்கவும், போதாமையை ஒழிக்கவும், அறியாமையைப் போக்கவும் கழகம் நிச்சயமாகப் பாடுபடும்!

தமிழகத்து அரசியல் வானில் உதயசூரியன் உதிக்குமேயானல் தாழ்வு நீங்கும், வாழ்வில் வளங்கொழிக்கும்! வற்ருத மகிழ்ச்சியோடு இன்பமயமான எதிர்காலத்தையும் பெறுவோம்!

இப்படி நல்லதொரு எதிர்காலத்தைப் படைக்க மாலைமணி வெளியிடும் இந்தத் தேர்தல் மலர் பயன்படும் என்றும் நம்புகிரோம்!

மாலைமணி படைக்கும் இந்தத் தேர்தல் மலரில் தேர்தலுக்குத் தேவையான எல்லாப் புள்ளிவிபரங்களும் இருக்கின்றன!

கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் மலரைக் கையிலேந்தி படைபோலப் புறப்பட்டு—பொதுமக்களுக்கு நல்ல விளக்கங்களைத் தந்து கழகத்திற்கு வெற்றி வாகை சூடி புதிய வாழ்வை சமைப்பார்கள் என்றும் நம்புகிரோம்!

தமிழ்த் தரணியில்
உதயசூரியன் உதிக்கட்டும்!
தாழ்வு நீங்கட்டும்!
வாழ்வில் வளம் கொழிக்கட்டும்!

அன்புள்ள

பி. எஸ். இளங்கோ

தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கை!

நான்காவது முறையாக நடைபெறும் பொதுத் தேர்தலில் மக்களின் பேராதரவை எதிர்பார்த்து ஈடுபடும் திராவிட முன்னேற்றக் கழகம்—இதற்கு முன்பு நடைபெற்ற (1957, 1962) இரண்டு பொதுத் தேர்தல்களிலும் ஆதரவளித்த பொதுமக்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

ஆதரவளித்த பொதுமக்கள் எந்தெந்த முறையில் கழகம் பணியாற்ற வேண்டும் என்று பணித்தார்களோ அம்முறையில் கிடைத்த வாய்ப்புகளுக்கும், அமைந்திருந்த வசதிகளுக்கும் ஏற்ற அளவில் கடமையை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் 1957-ல் பெற்றிருந்த வளர்ச்சியை விட பன்மடங்கு அதிகரித்த வளர்ச்சியை 1962-ல் பெற்றதற்கு பொதுமக்களின் நல்லெண்ணம் தவிர, வேறு எந்த விதமான வலிவும் கழகத்திற்கு இல்லை என்பதனை நாடு அறியும்!

1962-ல் பொதுமக்களின் அதிகரித்த ஆதரவைப் பெற்ற கழகம் பொறுப்புமிக்க ஜனநாயகப் பணியினை செம்மையாக நிறைவேற்றியதன் மூலம், மேலும் அதிகமான அளவில் பொதுமக்களின் ஆதரவைப் பெற்று இம்முறை புதிய பொறுப்புகளை ஏற்கத்தக்க நிலை பெற இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் கழகம் இம்முறைப் பொதுத் தேர்தலில் ஈடுபடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் இன்னலைத் துடைத்திட அரசினரை வலியுறுத்த வேண்டிய கட்டத்திலும் எதிர்ப்பு, அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நின்று பணியாற்றி இருக்கிறது!

இன்று விஷம்போல் ஏறி மக்களை வாட்டி வதைத்திடும் விலை ஏற்றம் தலை விரித்தாடத் தொடங்கிய போதே தி. மு. கழகம் பொதுமக்களின் சார்பில் நின்று விலை குறைப்புக் கிளர்ச்சியை நடத்தியது! அதன் காரணமாகப் பல்லாயிரக்கணக்கில் கழகத் தொண்டர்கள் சிறைப்பட்டனர்! இருவர் இறந்தனர்! அந்த அறப்போரில் ஈடுபட்டவர்களுக்கும், இன்னல், இழப்படைந்தோர்களுக்கும் கழகம் அஞ்சலி செலுத்துகிறது!

தமிழ் மொழி காத்திடவும், இந்தி ஆதிக்கத்தைத் தகர்த்திடவும் தி. மு. கழகம் துணிந்து போராடி வருவதை நாடறியும்!

பாராளுமன்றத்திலும், சட்ட சபையிலும் கழகம் பல்வேறு தீர்மானங்களைக் கொண்டு வந்து பணியாற்றியது! அவற்றில் சில—

(1) இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியது!

(2) தமிழ்மொழியின் ஆக்கத்திற்குப் பாடுபட்டது!

(3) 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக வரும்வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது!

(4) அனைத்திந்திய அரசாங்கத் தேர்வுகளில் இந்திக்கு மட்டும் இடமளிப்பதை எதிர்த்து நின்றது! தமிழைப் போன்ற 14 தேசிய மொழிகளுக்கும் இடமளிக்க வலியுறுத்தியது!

(5) தமிழ் நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயரிட வற்புறுத்தியது!

(6) விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்தது!

(7) உணவு நெருக்கடி தீர உழவர்களுக்கு வாழ்வும், நிலமும் கிடைத்திட நல்ல வழிமுறைகளை எடுத்துக் கூறியது!

(8) ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்ட சீர்குலைவை எடுத்துக்காட்டி கண்டித்தது!

(18-ம் பக்கம் பார்க்க)

தேர்தலில் போட்டியிடும் கழக அபேட்சகர்கள்!

சென்னை மாவட்டம்

1. வண்ணாரப்பேட்டை ... மு. வேதாசலம்
2. பேசின்பிரிட்ஜ் ... எம். ஆர். கண்ணன்
3. பெரம்பூர் (தனி) ... சத்தியவாணிமுத்து
4. புரசைவாக்கம் ... வி. எஸ். கோவிந்தராசன்
5. எழும்பூர் ... ஏ. வி. பி. ஆசைத்தம்பி
6. ஆயிரம் விளக்கு ... கே.ஏ. மதியழகன்எம்.எல்.ஏ.
7. திருவல்லிக்கேணி ... இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எம். எல். ஏ.
8. மயிலாப்பூர் ... இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ.
9. சைதாப்பேட்டை ... மு. கருணாநிதி எம். எல். ஏ.

செங்கற்பட்டு மாவட்டம்

10. கும்மிடிப்பூண்டி ... ——————
11. பொன்னேரி (தனி) ... நாகலிங்கம்
12. திருவொற்றியூர் ... ——————
13. பரங்கிமலை ... எம். ஜி. இராமச்சந்திரன்
14. திருப்போரூர் ... முனு. ஆதி எம். எல். ஏ.
15. செங்கற்பட்டு ... விசுவநாதன் எம். எல். ஏ.
16. மதுராந்தகம் ... ——————
17. உத்தரமேரூர் ... கே. எம். இராசகோபால்
18. காஞ்சிபுரம் ... ——————
19. குன்றத்தூர் (தனி) ... எம். கோபால்
20. திருப்பெரும்புதூர் ... டி. இராசரத்தினம்
21. கடம்பத்தூர் ... சி. வி. எம். அண்ணாமலை
22. திருவள்ளூர் (தனி) ... எஸ். எம். துரைராஜ்

வட ஆற்காடு மாவட்டம்

23. அரக்கோணம் ... எஸ்.ஜே.இராமசாமிஎம்.எல்.ஏ.
24. ஆற்காடு ... வீராசாமி
25. காட்பாடி ... ——————
26. பேரணாம்பட்டு ... ——————
27. நாட்ரம்பள்ளி ... டி. இராமசாமி
28. திருப்பத்தூர் ... சி. கே. சின்னராசு எம்.எல்.ஏ.
29. வாணியம்பாடி ... எம்.பி. வடிவேலு எம். எல். ஏ.
30. ஆம்பூர் ... எம். பன்னீர் செல்வம்
31. கணியம்பாடி ... தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ.

32. வேலூர் ... மா. பா. சாரதி
33. ஆரணி ... ஏ. சி. நரசிம்மன்
34. செய்யாறு ... புலவர் கோவிந்தன் எம்.எல்.ஏ.
35. வந்தவாசி (தனி) ... முத்துலிங்கம் எம். எல். ஏ.
36. பெரணமல்லூர் ... வி. டி. அண்ணாமலை
37. போளூர் ... குப்பம்மாள் சுப்பிரமணியம்
38. செங்கம் (தனி) ... பி. எஸ். சந்தானம்
39. தண்டராம்பட்டு ... ——————
40. கலசப்பாக்கம் ... எஸ். முருகையன் எம். எல். ஏ.
41. திருவண்ணாமலை ... ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
42. சோளிங்கர் ... ஆர். என். அரங்கநாதன் ...

தென் ஆற்காடு மாவட்டம்

43. செஞ்சி ... வி. முனுசாமி பி.காம். பி.எல்.
44. திண்டிவனம் ... ஆ. தங்கவேலு எம். எல். ஏ.
45. கண்டமங்கலம் (தனி) ... எம். இராமன்
46. விழுப்புரம் ... எம். சண்முகம் எம். எல். ஏ.
47. கடலூர் ... இரெ. இளம்வழுதி எம். ஏ. பி. எல்.
48. பண்ணுருட்டி ... எஸ். இராமச்சந்திரன் பி. ஈ.
49. புவனகிரி ... ஏ. கோவிந்தராசன்
50. காட்டுமன்னார்கோயில் (தனி) ... முடியனூர் கோவிந்தராசன்
51. சிதம்பரம் ... பொன். சொக்கலிங்கம்
52. விருத்தாசலம் ... மு. செல்வராஜ்
53. உளுந்தூர்பேட்டை ... சுப்பிரமணியம்
54. திருக்கோயிலூர் ... ஏ. எஸ். குமாரசாமி பி.எஸ்ஸி.
55. முகையூர் ... ஏ. கோவிந்தசாமி
56. ரிஷிவந்தியம் ... ——————
57. சங்கராபுரம் ... எஸ். பி. பச்சையப்பன்
58. கள்ளக்குறிச்சி ... டி. கேசவலு
59. மங்களூர் (தனி) ... அ. கிருஷ்ணன்
60. வானூர் (தனி) ... ஏ. ஜி. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ.
61. குறிஞ்சிப்பாடி (தனி) ... என். இராசாங்கம் எம்.எல்.ஏ.
62. மேல் மலையனூர் ... ஆர். ஆர். முனுசாமி

தர்மபுரி மாவட்டம்

63. கிருஷ்ணகிரி ... மன்னியப்பன்
64. காவேரிப்பட்டினம் ... சீராமுலு எம்.எல்.ஏ.
65. ஊத்தங்கரை ... கே. ஆர். கிருஷ்ணன்
66. அரூர் (தனி) ... டாக்டர் ஆறுமுகம்
67. தர்மபுரி ... சுப்பிரமணியம்
68. பாலக்கோடு ... எம். பி. முனுசாமி
69. பெண்ணாகரம் ... மாணிக்கம்

சேலம் மாவட்டம்

70. தாரமங்கலம் ... கே. ஆர். கோவிந்தராசன் பி.ஏ.பி.எல்.
71. சேலம்-1 ... செயராமன் பி. ஏ.
72. சேலம் 2 ... ஈ. ஆர். கிருஷ்ணன்
73. பனமரத்துப்பட்டி ... பொன்னுமலை
74. வீரபாண்டி ... ஆறுமுகம் எம். எல், ஏ.
75. இடைப்பாடி ... ஆறுமுகம்
76. சங்கரி ... ஆர். நல்லமுத்து எம். எல் ஏ

77. திருச்செங்கோடு ... டி. ஏ. இராசவேலு
78. ஆத்தூர் ... கே. சிவப்பெருமாள்
79. நாமக்கல் ... முத்துசாமி பி. ஏ. பி. டி.
80. ஏற்காடு (தனி) ... வி. சின்னச்சாமி
81. தலைவாசல் ... எம். மாரிமுத்து
82. ஓமலூர் ... சி. பழனி
83. இராசிபுரம் ... பெரியசாமி
84. கபிலர்மலை ... சி. வி. வேலப்பன் எம். எல். ஏ.

கோவை மாவட்டம்

85. மேட்டுப்பாளையம் ... ——————
86. தொண்டாமுத்தூர் ... இரா. மாணிக்கவாசகம்
87. கோவை மேற்கு ... ——————
88. கிணத்துக்கடவு ... எம். கண்ணப்பன்
89. பொள்ளாச்சி ... சண்முகசுந்தரம் பி.எஸ்ஸி.
90. வால்பாறை (தனி) ... அக்காமலை இராமசாமி
91. உடுமலைப்பேட்டை ... சாதிக் பாட்சா பி. ஏ. பி. எல்.
92. தாராபுரம் (தனி) ... ——————
93. வெள்ளக்கோயில் ... குட்டப்பாளையம் சாமிநாதன்
94. காங்கயம் ... வேலுச்சாமி
95. பொங்கலூர் ... ——————
96. திருப்பூர் ... துரைசாமி
97. பெருந்துறை ... ——————
98. ஈரோடு ... மு. சின்னச்சாமி
99. பவானி ... ஏ. எம். இராசா எம். ஏ.
100. அந்தியூர் ... நடராசன் பி. ஏ. பி. எல்.
101. பவானிசாகர் (தனி) ... வா.க. இராமராசன்

நீலகிரி மாவட்டம்

102. கூடலூர் (தனி) ... ——————
103. குன்னூர் ... பெல்லி என்கிற கருணைநாதன்

கன்னியாகுமரி மாவட்டம்

104. நாகர்கோயில் ... எம். சி. பாலன் பி.ஏ.பி.எல்.

மதுரை மாவட்டம்

105. ஒட்டன்சத்திரம் ... என். நாச்சிமுத்து
106. பழனி ... கே. கிருஷ்ணமூர்த்தி
107. கம்பம் ... எம். இராசாங்கம் எம்.எல்.ஏ.
108. பெரியகுளம் ... மேத்தர்

(25-ம் பக்கம் பார்க்க)

தேவை! ஏஜண்ட்!! தேவை!!!

பூமகள் புதுமுறை பதிப்பாக உங்கள் அபிமான மர்மக்கதை மன்னன் எழுதும் சிறுவர் துப்பறியும் மர்ம நாவல்களையும் பூமகள் பதிப்பான சினிமா பாட்டுப்புத்தகங்களையும், விற்பனை செய்ய எல்லா இடங்களுக்கும் "ஏஜண்டுகள் தேவை."

முன் பணம் அனுப்பவேண்டாம். விலைப்பட்டியலுக்கு உங்கள் முழு பெயர் விலாசத்தையும் தெரிவியுங்கள்

POST BOX No.1699...

எல்லா பதிப்பகத்தாரின் நூல்களும் கிடைக்குமிடம்

பூமகள் புத்தகப் பண்ணை
3/71, பிராட்வே ...... சென்னை-1.

அராஜகம் ஒழிந்திட அமைதி வளர்ந்திட

உதயசூரியனுக்கே ஓட்டளியுங்கள்!

வாழ்வு மலர

உதயசூரியனுக்கே ஓட்டளியுங்கள்!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

(9) தென்னாட்டுக்குத் தொழில் வளம் பெருக வாதாடியது!

(10) மத்திய சர்க்காரால் தமிழ் நாட்டில் துவக்கப்பட்ட தொழில் அமைப்புகளை மாநில ஆட்சிப் பொறுப்புக்கு மாற்றும் படி கோரியது !

(11) பாங்கு, பஸ் போக்குவரத்து, சினிமா கொட்டகை ஆகியவற்றை தேசியமய மாக்கும்படி கோரியது !

(12) கள்ளமார்க்கெட்காரர்களுக்கு துணை போகும் நிலையை கண்டித்தது !

(13) வரிப்பளுவின் கொடுமையைக் கண்டித்தது !

(14) வெளிநாட்டுக் கடன்சுமை அதிகமாவதையும், அதனால் உள்நாட்டு பொருளாதாரம் கட்டுண்டு கிடப்பதையும் கண்டித்தது !

(15) நிலச் சீர்திருத்தத்தின் போலித் தன்மையை வெளிப்படுத்தியது !

(16) ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலச் சொந்தக்காரர்கட்கு நிலவரியும், அதனுள் தொடர்புள்ள மற்ற எல்லா வரிகளையும் நீக்கக் கோரியது.

(17) வாழக்கைச் செலவுகளின் ஏற்றத்திற்குத் தக்கவாறு தொழிலாளர்களின் வருமானம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று வாதாடியது !

(18) மாநில அரசாங்க ஊழியர்களின் சம்பள விகிதங்களும் வேலை விதிகளும் மத்திய அரசாங்கத்தில் உள்ளவைகளுடன் ஒத்த முறையில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது !

(19) உயர்ந்த சம்பளம், குறைந்த சம்பளம் இவற்றிடையே ஏற்றத் தாழ்வு குறைக்கப்பட வேண்டும் எனவும், குறைந்த சம்பளவிகிதங்களை உயர்த்தவும், உயர்ந்த சம்பளங்களுக்கு உச்ச வரம்புகட்ட வேண்டுமெனவும் வாதாடியுள்ளது !

(20) ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள், கிராம தபால் ஊழியர்கள் ஆகியோரின் சம்பள விகிதங்களை உயர்த்த வாதாடியது.

(21) உறுப்பு குறைபாட்டால் வேலை செய்ய முடியாதவர்களுக்கும், விதவைகளுக்கும் ஓய்வுச் சம்பளம் வேண்டும் எனக் கோரியது !

(22) தங்கக் கட்டுப்பாடு நீக்கவும், கைத்தறிக்கு ஏற்றம் தரவும் வாதாடியது !

(23) தீண்டாமையை ஒழித்தல், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி, தொழில்களை அளிக்க வற்புறுத்தியது.

(24) வெளி நாடுகளில் சிலவற்றில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ்ப் பேசும் மக்கள் குடியுரிமை பறிக்கப்பட்டு பல்வேறு கொடுமைகளுக்குப் பின் வெளியேற்றப்படுவதைக் கண்டித்தது.

(25) பர்மா, இலங்கை முதலிய வெளி நாடுகளிலிருந்து திரும்பி வருபவர்கட்கு தக்க நட்டஈடு தருவதுடன் வாழக்கை வசதிகளையும், தொழில் வாய்ப்புகளையும் தர வேண்டும் என வற்புறுத்தியது.

(26) சுயமரியாதைத் திருமணங்களை செல்லுபடியாக்க சட்டம் இயற்றப்பட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியுள்ளது.

ஆனால் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் எண்ணிக்கைப் பலத்தை மட்டும் நம்பி ஆட்சி நடத்திவரும் காங்கிரஸ் ஏற்க மறுத்துவிட்டது.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் கழகம் மீண்டும் பொதுமக்களின் ஆதரவைப் பெற விரும்புகிறது.



உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம்!

ஏழை மக்களைக் கசக்கிப் பிழிந்து பெற்ற வரித் தொகையை, ஊதாரித்தனமும் ஊழலும் நெளியும் நிர்வாகத் துறைக்கும், விளம்பரச் சாவடிகள் போன்றுள்ள தேவையற்ற அமைப்புகளுக்கும், போலி கௌரவம் தேடிடும் போக்கிற்குமாகச் செலவிட்டு விடுவதால், ஏழைகளுக்கு இதம் தரத்தக்க திட்டங்களுக்கான பணம் கிடைக்காமல் போய்விடுகிறது.

தி. மு. கழகம், இந்த ஊழலையும் ஊதாரித்தனத்தையும் ஒழித்து, ஏழைக்கும் திட்டங்களுக்கு முதலிடம் தர விரும்புகிறது.

ஏழைகளுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை இதுநாள் வரையில் காங்கிரஸ் அரசு கவனிக்காமல் இருந்து வருவதற்கான மற்றோர் காரணம். ஏழை மக்களை எவ்வளவு புறக்கணித்தாலும் வஞ்சித்தாலும் அவர்களால் காங்கிரஸ் அரசை எதிர்த்து நிற்கவோ, மாற்றி அமைக்கவோ முடியாது என்ற எண்ணம் கொண்டிருப்பதேயாகும்.

இந்த எண்ணம் தடித்துப் போவது, ஜனநாயகத்துக்கே உலை வைக்கக்கூடியது என்பதால், தி. மு. கழகம் ஏழையின் குரல் மதிக்கப்படும் ஆட்சி அமைய வேண்டும் என்ற திட்டத்தை மக்கள் முன்வைக்கிறது.

சமூகத்தில் மிகப் பெரும்பாலோராக உள்ள ஏழைகளின் வாழ்விலே நிம்மதி ஏற்படுத்தாது இருப்பதன் மூலம், அவர்கள் சலிப்புற்று, தொழில் திறமையும் தொழில் ஆர்வமும், தாங்கும் சக்தியும் அற்றுப்போவது, 'தேசீய நஷ்டம்' என்பதைத் தி. மு. க. சுட்டிக் காட்ட விரும்புகிறது.

நவீன யந்திரங்களையும், தொழில் நுணுக்க முறைகளையும் மட்டுமே நம்பி, பொருளும் செல்வமும் பெருகும் என்று எண்ணிக்கொண்டு, எல்லாவற்றையும் இயக்கிட வேண்டிய மனிதனுடைய சக்தியைப் போதுமான முறையில் வளமாக்கிடாது இருப்பது, நாட்டுக்கு முன்னேற்றம் அளிக்காது என்று தி. மு. க. வலியுறுத்துகிறது.

பொதுமக்கள் ஆணை பிறப்பித்தால், தி.மு. கழகம், மனிதனை மேம்பாடடையச் செய்வதன் மூலம் அவனுடைய அறிவாற்றலையும் மனத் திருப்தியையும் வளரச் செய்து, அதன்மூலம் நாட்டுச் செல்வத்தைப் பெருகிடச் செய்யும் முறையினை மேற்கொள்ளும் என்று உறுதி அளிக்கிறது.

ஜனநாயக நாடுகளில், அரசியல் கட்சிகளுக்கு இடையிலே துவக்க காலத்தில் இருந்திடும் அடிப்படையான கொள்கை மாறுபாடு பெரும் அளவு குறைந்து போய்விடுவது முறையாகி விட்டிருக்கிறது.

கட்சிகளின் அமைப்பு, நடவடிக்கை, இயங்கும் முறை ஆகியவற்றைக் கணக்குப் பார்த்து, எந்தக் கட்சி ஏழைகளுக்கு ஏற்றது என்பதனைத் தீர்மானிக்க வேண்டி வருகிறது.

அம் முறையில் பார்க்கும்போது காங்கிரஸ் கட்சி தன் திட்டம் ஜனநாயக சோஷியலிசம் என்று விளம்பரப்படுத்திக்கொண்ட போதிலும், ஜனநாயகத்தையோ சோஷியலிசத்தையோ நிறைவேற்றத் துளியும் விருப்பமோ, தகுதியோ அற்ற, காட்டரசர் வழி வந்த நிலசுவான்தார்கள், இலாப வேட்டையாடிடும் முதலாளிகள் மோசடி நடத்தியேனும், பொருள் குவித்திடும் போக்குக் கொண்ட பதுக்கல்காரர்கள் ஆகியோரின் முகாமாகக் காங்கிரஸ் கட்சி ஆகிவிட்டிருப்பதைக் காணலாம்.

ஏழைகளின் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்துவோம் !

இத்தகைய காங்கிரஸ் கட்சி, சோஷியலிசத்தை வெற்றி பெறச் செய்திட முடியாது.

காங்கிரசின் அமைப்பு ஏழைகளுக்குக் கேடு செய்திடுவதாகவே இருப்பதனுல்தான், முற்போக்கான திட்டம் என்று விளம்பரம் பெற்ற நிலச் சீர்திருத்தச் சட்டம், சத்தற்றதாகி விட்டிருக்கிறது. காங்கிரசைக் கைப்பற்றி ஆட்டிப் படைக்கும் நிலச்சுவான்தாரர், நில உச்சவரம்புச் சட்டத்தையே உருக்குலேத்து விட்டனர்.

அவர்களேத் தடுத்திடும் ஆற்றல் இன்றைய காங்கிரசாட்சிக்கு இல்லே.

தி. மு. கழகம் இந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளே அடைத்து, இந்தச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள நிலச்சுவான்தாரர்கள் செய்து கொண்ட ஏற்பாடுகளின் போலித் தன்மையைக்கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க திட்டமிடுகிறது.

உழுபவனுக்கே நிலம் என்ற திட்டத்தை அமுலாக்கக் கழகம் உறுதி கொண்டிருக்கிறது.

நிலமற்றவர்களுக்கு நிலம் தருவதுடன், அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்திடத் தேவைப்படும் வசதிகளேயும், தந்திட முனேயும்.

ஏழைகளின் நலனுக்காக என்று அமைக்கப் பட்ட கூட்டுறவுத் துறையை, ஆதிக்கக்காரர்களின் கரத்தில் இருந்து விடுவிக்கும் முயற்சியை மேற்கொள்ள கழகம் விரும்புகிறது.

உழவர்களின் நன்மைக்காக என்று கூறி அமைக்கப்பட்ட சமுதாயநல திட்டம் பயனற்றுப் போயுள்ளதை உணர்ந்திடுவதால், கழகம் அந்தத் திட்டத்தை உயிருள்ளதாகவும், உருப்படியான நன்மை தரத்தக்கதாகவும் திருத்தி அமைத்து மேட்டுக் குடியினரின் பிடியிலிருந்து அந்த அமைப்பை விடுவிக்க விரும்புகிறது.

LICENCE No. F. P. O 978. துவக்கம் 1954.

அன்றாடத் தேவைக்கு உகந்தது ! சுவை மிக்கது !

பன்னிரெண்டு ஆண்டுகளாக பொதுமக்களின் பாராட்டுதலே பெற்றது !

தனிநாடு ஸ்பெஷல் ஊறுகாய்

புதிய முறையில் பிளாஸ்டிக் பைகளில் அடைத்து எங்கும் விற்பனேயாகிறது!

எங்கும் விற்பனேயாளர்கள் தேவை !

விபரங்களுக்கு :

உரிமையாளர் ஏ. தேவராசன்

69, நல்லப்ப வாத்தியார் தெரு, சென்னே-21.



வரியைக் குறைப்போம்! வசதியைப் பெருக்குவோம்!

உர உற்பத்திக்காக, பெரிய பெரிய திட்டங்கள் வரட்டும் என்று காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் போக்கை கழகம், ஏற்க மறுக்கிறது. சிறிய அமைப்புகளைப் பரவலாக அமைத்து, உர உற்பத்தியையும, வினியோகத்தையும் பயனுள்ளதாக்கும் முறையை மேற்கொள்ள விரும்புகிறது.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க கழகம் முனைந்து நின்றிட விரும்புகிறது.

பருவ மழை தவறும் என்ற குறிகள் தென்படும்போது, இயற்கை கெடுத்துவிட்டது என்று கூறிக்கொண்டிருந்துவிடாமல், மறைந்து கிடக்கும் நீர்வளத்தையும் விஞ்ஞான முறைப்படி நீர் பெறும் முறையையும் செம்மைப்படுத்தி. வறட்சி நிலையைத் தடுத்திடும் திட்டத்தை மேற்கொள்ள விரும்புகிறது. கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம் கதிரவன் ஒளியை விஞ்ஞான முறைப்படி பயன்படுத்தும் திட்டம் ஆகியவை பற்றி கழகம் தனிக் கவனம் செலுத்த விரும்புகிறது.

ஆற்றுப் பாசானம் அற்ற இடங்களில், நீரூற்றுகளைக்கொண்டும், ஆழ் கிணறுகளைக் கொண்டும் குறையைப் போக்கிடும் திட்டம் வகுத்துச் செயல்பட விழைகிறது.

தரிசு நிலங்களை விளை நிலமாக்க திட்டமிட்ட முயற்சியை மேற்கொள்ள விரும்புகிறது.

இந்தக் காரியங்களைத் துரிதப்படுத்த, ஒரு 'நிலப்படை' அமைத்திட வேண்டும் என்ற கழக திட்டம், காங்கிரஸ் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மக்களின் ஆணையும் ஆதரவும் கிடைத்திடின், கழகம் அந்தத் திட்டத்தை மேற்கொள்வது என்ற உறுதி கொண்டிருக்கிறது.

தொழில் துறையைப் பொருத்த மட்டில், சோஷியலிசம் பேசும் காங்கிரசு, பெரிய முதலாளிகளிடமே தொழில் துறையை ஒப்படைத்து விட்டதால், ஏழை பணக்காரன் பேதம் வளர்ந்து விட்டதுடன், அரசியலை ஆட்டிப் படைக்கும் ஆட்சியை அடிமை கொள்ளவுமான வலிவும் ஆதிக்க உணர்வும் முதலாளிகளுக்குத் தடித்துப் போய்விட்டதுடன் பாசீசம் உருவெடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது கண்டு கழகம் வருந்துகிறது.

இந்த முதலாளித்துவப் பிடியைப் போக்கிடும் முறையில தொழில் துறையைத் திருத்தி அமைக்கும் திட்டத்தை மேற்கொள்ள, கழகம் பொது மக்களின் ஆதரவையும் ஆணையையும் எதிர்பார்த்து நிற்கிறது.

சோஷியலிசம் பேசிக் கொண்டே, காங்கிரசு அரசு, உள்நாட்டு வெளிநாட்டு முதலாளிகளுக்கு ஆதிக்கம் வளரும் நிலையை உருவாக்கி விட்டதைச் சுட்டிக் காட்டுவதுடன், அந்தச் செல்வவான்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும்

எல்லோருக்கும் எமது அன்பு வாழ்த்துக்கள்!

ஜீவ சத்துள்ள ருசியான சிற்றுண்டிக்கு "சூரிய மார்க் சேமியா"வை எப்பொழுதும் உபயோகியுங்கள். எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

249, லிங்கி செட்டி தெரு,
மண்ணடி, சென்னை-1.

உரிமையாளர்: க. சுந்தரராஜ்

உழவர் படை யமைப்போம்! உற்பத்தியைப் பெருக்குவோம்!

ஏற்பட்டுள்ள எழுதாத ஒப்பந்தம், ஏழையைக் கெடுத்து ஜனநாயகத்தைப் போலியாக்குவதை எடுத்துக் கூறி, அந்த ஒப்பந்தத்தை உடைத் தெறியும ஆற்றலைக் கழகத்துக்கு அளிக்கும்படி பொதுமக்களைக் கேட்டுக் கொள்கிறது.

சோஷியலிசம் பேசிக்கொண்டே காங்கிரசு அரசு தொழிலாளர்களுக்குக் கேடு விளைவிக் கும் சட்டங்களை இயற்றி இருப்பதை உணர்ந்து, அத்தகைய சட்டங்களை உடைத்தெறியும் கட் டளையைப் பிறப்பித்து அதற்குத் தேவையான வலிவுடன் கழகத்தை ஆட்சி மன்றம் அனுப்பி வைக்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

விலைவாசி ஏற்றத்தாலும் வருமானக் குறை வாலும் தனிப்பட்டவர்களுக்கு, அதிலும் கிராமங் களிலுள்ள நடுத்தர—ஏழைக் குடும்பங்களுக் குள்ள கடன் சுமை குறிப்பாக உழவர் மீது

ஓர் நற்செய்தி

அன்புடையீர்,

GRAND
DRESSES

ரெடிமேட் ஆடைகள் வாங்கும்போது

லேபிலைப் பார்த்து வாங்குங்கள்!

அவை நாகரீக தயாரிப்புடையவை. நீடித்து உழைக்கக் கூடியவை. உங்கள் குழந்தைகளுக்கு கவர்ச்சிகர தோற்றமளிக்கக் கூடியவை.

100க்கும் மேற்பட்ட தினுசுகளில்

"பாபாசூட், ஸ்லாக்குகள், பேண்ட் வகைகள் கவன்கள், ராம்பர், ஜீன்சூட், பைஜாமா சூட் வகையறுக்கள்"

நகரிலும், தென் இந்தியா முழுவதிலும் எல்லா முக்கிய கடைகளில் கிடைக்கும்.

உயர்தர ஆடை தயாரிப்பாளர்கள் :

"கிராண்ட் டிரஸஸ்"

20, Codown Street, MADRAS-1

தேவைக்கு வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்.

விலைவாசிகளைக் குறைப்போம்! வேதனையைப் போக்குவோம்!

உள்ள கடன் சுமை அதிகமாகிக் கொண்டே போவதால், அதைத் தடுத்து நிறுத்தி, (குறிப்பிட்ட கால அளவுக்காவது) கடன் தொல்லையிலிருந்து மீள, கடன் நிவாரண மசோதாவைக் கொண்டு வர, கழகம் விரும்புகிறது.

.உணவுப்பற்றுக்குறையும், உணவுப் பண்டங்களின் விலையேற்றமும், நடுத்தர—ஏழை மக்களைப் பாதிக்கின்ற காரணத்தினால், அரசாங்க நிதியுதவி அளித்து ஏழைகளால் பெறக் கூடிய அளவு உணவு விலைகளைக் குறைத்திட தி.மு.க. பாடுபடும்.

அரசாங்கத் திட்டங்களில் ஏற்பட்ட ஊதாரித்தனத்தாலும், பயனற்றச் செலவுகளாலும், நாட்டின் நிதியிருப்புக் குறைத்து, கிடைத்த அளவு உள்நாட்டிலும் கடன்களை அரசாங்கம் வாங்கியுள்ளது. இந்தக் கடன்களின் மீது ஆண்டு தோறும் கட்டப்பட வேண்டிய தவணையும் வட்டியுமே நாட்டுப் பொருளாதாரத்தின் மீது தாங்க முடியாத சுமையை வைக்கிறது. இந்தக் கடன் பளுவைக் குறைக்கவும், வாங்கிய கடன்களுக்கு நல்ல பலன்களை காணவும் கழகம் பாடுபடும்.

நில அமைப்பாலும் பொருளாதாரவளர்ச்சியாலும் ஒன்றுபட்டு வாழ வேண்டிய ஆசிய நாடுகளில் இந்தியாவுடன் ஒத்துப்போகக்கூடிய நாடுகளுடன் நாம் ஒன்று கூடி, ஒரு ஆசியப் பொதுச் சந்தையை உருவாக்கினால், ஆசிய நாடுகளின் பொருளாதாரமும் தொழில் வளமும் வளர்வதற்கு வழிவகை இருப்பதாகக் கழகம் கருதுகிறது.

மக்களின் நியாயமான வேண்டுகோள்களையும் கிளர்ச்சிகளையும் நேரியமுறையில் தீர்க்க முடியாமல். அடக்குமுறையின் மூலம் அடக்க முயல்கிறது. இதில் கொடுமையான கட்டம், அடிக்கடி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க படைகளின் உதவியை நாடுவதாகும். நாட்டின் பாதுகாப்புக்குப் பயன்படுத்த வேண்டிய படை வீரர்களை மக்களின் மீது ஏவிவிடுவது, படை வீரர்களுக்குரிய பணியிலிருந்தும் அவர்களை வேறு பக்கம் திருப்புவதுடன் மக்களுக்குப் படை வீரர்களிடம் உள்ள நன்மதிப்பைக் குறைப்பதுமாகும். மக்கள் கிளர்ச்சிகளைச் சமாளிக்க பட்டாளம் வரவழைக்கப்படும் முறை தவிர்க்க வழி காணும்.

இந்தியாவில் தற்பொழுதுள்ள தேர்தல் முறையில், ஆதரவு தரும் வாக்காளர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்த விகிதப்படி, சட்ட மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் இடங்கள் கிடைப்பதில்லை. எடுத்துக்காட்டாக, சென்ற தேர்தல்களில் தொடர்ந்து. காங்கிரஸ் கட்சிக்கு 45 சதவீத வாக்குகள் கிடைத்த போதிலும், பாராளுமன்றத்தில் 75 சதவீத இடங்களைப் பெற்றது. எனவே விகிதாசார தேர்தல் முறை கையாளப்பட்டால்தான் மக்களின் ஆதரவை சரியாக வெளிப்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் சட்ட மன்றங்களில் இடங்கள் கிடைக்கும். விகிதாச்சார தேர்தல் முறையின் அடிப்படைத் தத்துவம் (ப்ரொபஷனல் ரெப்ரசென்டேஷன்) ஒத்துக்கொள்ளப்பட இந்த நாட்டுக்கு ஏற்றவகையில் தேர்தல் முறையை மாற்றியமைக்க கழகம் பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளும்.

தமிழைக் காப்போம்! இந்தியை விரட்டுவோம்!

முக்கியமான அரசியல் பிரச்சினைகளில் வெறும் சட்டசபை — பாராளுமன்ற பலத்தை மட்டும் நம்பியிராமல், நேரடியாக மக்களின் கருத்தையறிய வாக்கெடுப்பு முறை (ரெபரண்டம்) கையாளப்பட வேண்டும். இந்த முறை அரசியல் சட்டத்தில் ஒத்துக் கொள்ளப்பட வழி காணும்.

நல்லாட்சி காணும் நோக்கம்கொண்டிருப்பதுடன், தி. மு. கழகம், சில தனித்தன்மை வாய்ந்த நோக்கங்களையும் கொண்டுள்ளது.

மொழி, வரலாறு ஆகியவற்றில் தொடர்புடைய தமிழகம்—ஆந்திரம் — கேரளம் — கருநாடகம்--ஆகிய நான்கு மாநிலங்களும், மேலும் அதிகமான நேசத் தொடர்பு கொண்டு, விளங்கிட கழகம் பணியாற்ற விரும்புகிறது.

'இந்தியாவுக்குள் திராவிடம் என்ற இந்த திட்டம், திராவிட மொழி பண்பாடு ஆகியவற்றின் தனித் தன்மைகளைப் பாதுகாத்திடவும், அவற்றின் சிறப்பியல்புகளை இந்தியாவின் பிற பகுதி மக்கள் போற்றி வரவேற்று ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும் தேவைப்படுகிறது என்பதனைக் கழகம் வலியுறுத்துகிறது.

ஒருமைப்பாடு என்பதை வலியுறுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, அது, ஒரு பகுதியினர் பிற பகுதி மீது ஆதிக்கம் செலுத்துவதாக ஆகிவிடாமல், பாதுகாத்திடும் பொறுப்பை தி. மு. கழகம் மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளது.

மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரு சீராக எல்லா மாநிலங்களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும், தி. மு. கழகம் பொறுப்புடன் பணியாற்ற உறுதி கொண்டிருக்கிறது.

மக்களின் குரலே மகேசன் குரல் — என்ற பேருண்மையை தி. மு. கழகம் உணர்ந்திருக்கிறது. நல்லாதரவு கொடுத்து, மக்களை மதித்து அவர்களின் நல்வாழ்வுக்காகச் செயல்படும் ஒரு நல்லாட்சி அமைத்திட கழகத்துக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும்படி பொது மக்களிடம், தி. மு. க. முறையிட்டுக்கொள்கிறது.

மக்கள், பிறப்பிக்கும் ஆணையின் வழி நின்று தொடர்ந்து பணியாற்றக் கழகம் உறுதி தெரிவிக்கிறது.

வாழ்க மக்களாட்சி!
மலர்க மக்களாட்சி!

Abdominal Belt,

Hernia Truss;

Elastic Corset;

,, Knee Cap;

AVAILABLE AT

Phone: 22044 ESTD: 1923.

A. WELLDON & CO.,

Pharmaceutical Chemists

174, Broadway, MADRAS-1.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

109.	தேனி	...	பழனிவேல்ராசு பி. ஏ. பி. எல். (தி.மு.க. ஆதரவு)
110.	கிலக்கோட்டை	...	ஆ. முனியாண்டி
111.	சோழவந்தான்	...	பி. எஸ். மணியம் பி.ஏ.பி.எல்.
112.	திருப்பரங்குன்றம்	...	அக்கினிராசு பி. ஏ. பி. எல்.
113.	மதுரை மத்தி	...	சி. கோவிந்தராசன்
114.	மேலூர்தெற்கு (தனி)	...	ஓ. பி. இராமன் பி. ஏ. பி. எல்.
115.	மேலூர் வடக்கு	...	சா. பெ. மலைச்சாமி எம். ஏ.
116.	வடமதுரை	...	வி. எஸ். இலட்சுமணன்
117.	ஆத்தூர்	...	வி. எஸ்.எஸ் மணி எம்.எல்.ஏ.

திருச்சி மாவட்டம்

118.	தொட்டியம்	...	எஸ். கே. வடிவேலு
119.	முசிறி	...	முத்துச்செல்வன் பி. ஏ.
120.	உப்பிலியாபுரம்	...	து.ப. அழகமுத்து எம்.எல்.ஏ.
121.	பெரம்பலூர் (தனி)	...	ஜே. எஸ். இராசு பி.ஏ.பி.டி.
122.	வரகூர்	...	————————
123.	ஆண்டிமடம்	...	————————
124.	ஜெயங்கொண்டம் (தனி)	...	கலியமூர்த்தி
125.	அரியலூர்	...	சா. இராமசாமி எம்.எல்.ஏ.
126.	லால்குடி	...	————————
127.	ஸ்ரீரங்கம்	...	————————
128.	திருச்சி-1.	...	எம். எஸ். மணி எம்.எல்.ஏ.
129.	திருவெறும்பூர்	...	கே. காமாட்சி
130.	குளித்தலை	...	கந்தசாமி பி.ஏ.பி.எல்.
131.	கிருஷ்ணராசபுரம் (தனி)	...	சௌந்திரபாண்டியன் எம். ஏ. பி. எல்.
132.	கடலூர்	...	————————
133.	விராலிமலை	...	————————
134.	திருமயம்	...	புலவர்பெரி. பொன்னம்பலம்
135.	ஆலங்குடி	...	கே. வி. சுப்பையா பி. ஏ.
136.	புதுக்கோட்டை	...	அ. தியாகராசன் எம்.எல்.ஏ.

தஞ்சை மாவட்டம்

137.	திருவையாறு	...	புலவர் முருகையன்
138.	தஞ்சை	...	————————
139.	வலங்கைமான்	...	சித்தமல்லி ந. சோமசுந்தரம்
140.	கும்பகோணம்	...	————————
141.	ஆடுதுறை	...	————————
142.	செம்பனார்கோயில்	...	எஸ். கணேசன்
148.	மாயூரம்	...	என். கிட்டப்பா
144.	குடவாசல்	...	சி. கிருஷ்ணமூர்த்தி
145.	வேதாரண்யம்	...	மீனாட்சிசுந்தரம்
146.	திருத்துறைப்பூண்டி	...	ந. தர்மலிங்கம்
147.	மன்னார்குடி	...	சு. நாராயணசாமி
148.	ஒரத்தநாடு	...	கணேசன் பி. ஏ. பி. எல்.
149.	கந்தர்வக்கோட்டை	...	துரை. கோவிந்தராசன்
150.	பேராவூரணி	...	எஸ். கிருஷ்ணமூர்த்தி
151.	அறந்தாங்கி	...	ஆ. துரையரசன் எம்.எல்.ஏ.

இராமநாதபுரம் மாவட்டம்

152. திருப்பத்தூர் ... எஸ். மாதவன் பி.காம்.,பி.எல்.,எம்.எல்.ஏ.

153. இளையாங்குடி ... மலைக்கண்ணன் பி. ஏ.

154. இராமநாதபுரம் ... தங்கப்பன்

155. பரமக்குடி (தனி) ... டி. கே. சிறைமீட்டான்

156. சிவகங்கை ... சேதுராமன்

157. அருப்புக்கோட்டை..... ————————

158. விருதுநகர் ... பெ.சீனிவாசன்எம்.ஏ.பி.எல். (மாணவர் தலைவர்)

159. ஸ்ரீவில்லிபுத்தூர் ... ஆண்டி என்கிற குருசாமி

திருநெல்வேலி மாவட்டம்

160. விளாத்திகுளம் ... ————————

161. கோயில்பட்டி ... ————————

162. சங்கரன்கோயில் (தனி) ... ————————

163. வாசுதேவநல்லூர் ... ந. வெள்ளதுரை

164. தென்காசி ... கதிரவன்

165. ஆலங்குளம் ... ஆலடி அருணா பி.ஏ.பி.எல்.

166. கங்கைகொண்டான்... (தனி) கருப்பையா

167. திருநெல்வேலி ... ஏ. எல். சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

168. தூத்துக்குடி ... எம். எஸ். சிவசாமி

பாராளுமன்ற வேட்பாளர்கள் !

1. தென் சென்னை ... அறிஞர் அண்ணா
2. வட சென்னை ... கி. மனோகரன் எம்.ஏ.எம்.பி.
3. ஸ்ரீபெரும்புதூர் ... பி. சிவசங்கரன் எம். பி.
4. கடலூர் ... வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ. பி.எல எம்.எல்.ஏ.
5. கள்ளக்குறிச்சி ... தெய்வீகன் பி. ஏ. பி. எல்.
6. சிதம்பரம் (தனி) ... மாயவன் பி. ஏ. பி. எல்.
7. சேலம் ... க. இராசாராம் பி. ஏ. எம். பி.
8. மேட்டூர் ... செ. கந்தப்பன் எம்.ஏ.,எம்.பி.
9. மாயூரம் (தனி) ... கா. சுப்ரவேலு
10. தஞ்சாவூர் ... எஸ்.டி. சோமசுந்தரம் பி. இ:
11. திருப்பத்தூர் (வ.ஆ.) ... அரூர் முத்து எம்.பி.
12. கோபி ... சுவாமிநாதன்
13. பொள்ளாச்சி ... உடுமலை நாராயணன்
14. தாராபுரம் (தனி) ... சி. டி. தண்டபாணி
15. திண்டுக்கல் ... நீ. அன்புச்செழியன்பி.ஏ.பி.எல்.
16. பெரம்பலூர் (தனி) ... துரைராசு
17. வேலூர் (தனி) ... ஜி. குசேலர்
18. சிவகெங்கை ... தா. கிருஷ்ணன் எம். ஏ.
19. கிருஷ்ணகிரி ... ————————
20. திருத்தணி ... ————————
21. செங்கற்பட்டு ... ————————
22. திண்டிவனம் ... ————————
23. கும்பகோணம் ... ————————
24. வந்தவாசி ... ————————
25. திருச்செங்கோடு ... ————————

கூட்டணிக் கட்சி அபேட்சகர்கள்!

சுதந்திர கட்சி

பாராளுமன்ற அபேட்சகர்கள்

நாகர்கோயில்
டாக்டர் எம். மத்தியாஸ் எம்.பி.பி.எஸ்.

திருநெல்வேலி
எஸ். சேவியர் பி.ஏ.பி.எல்.

பெரியகுளம்
எச். அஜ்மல்கான் எம். ஏ. பி. எல்.

கரூர்
சி. முத்துசாமி

நீலகிரி
எம். கே. நஞ்சா கவுடர்

சட்டமன்ற அபேட்சகர்கள்.

பார்க் டவுன் (சென்னை):
எச்.வி. ஹண்டே எம்.எல்.சி.

அரவக்குறிச்சி:
எம். கந்தசாமி கவுண்டர்

அச்சிறுபாக்கம்:
பி.எஸ். எல்லப்ப பாகவதர்

ஆண்டிப்பட்டி:
எஸ். பரமசிவன்

சேடப்பட்டி:
ஆண்டி பி.ஏ.பி.எல்.

உசிலம்பட்டி
பி. கே. மூக்கையா தேவர் எம். எல். ஏ.

காரைக்குடி:
எஸ். மெய்யப்பன் பி.ஏ.பி.எல்.

மானாமதுரை:
சீமைச்சாமி எம்.எல்.ஏ.

ஓட்டப்பிடாரம்:
எம். முத்தையா

சேரன்மாதேவி
டி. எஸ். ஆதிமூலம்

கடையநல்லூர்:
ஏ.ஆர். சுப்பையா முதலியார் எம். எல். ஏ. [ஆதரவு சுயேச்சை]

பத்மனாபபுரம்:
ஜே. நேசமணி பி.ஏ.பி.எல்.

கொளச்சல்:
எஸ். ரத்ன ராஜ்

விளவங்கோடு:
எஸ். முத்துக்கருப்ப பிள்ளை எம்.ஏ. எல்.எல்.பி.

உத்தனப்பள்ளி:
கே.எஸ். கோதண்டராமய்யா எம். ஏ., பி. டி.

ஹோசூர்:
பி. வெங்கடசாமி

கோபி:
கே. எம். ராமசாமி கவுண்டர் பி.ஏ.பி.டி.

உதகமண்டலம்:
கே. போஜன்

தமிழரசுக் கழகம்

தியாகராயநகர்
ம. பொ. சிவஞானம்

திருத்தணி:
வி. கே. குப்புசாமி

முஸ்லீம் லீக்

பாராளுமன்றம்

இராமநாதபுரம்
எஸ்.எம். ஷரீப் எம். ஏ.

சட்டமன்றம்

துறைமுகம்:
டாக்டர் அபிபுல்லா பேக் [முன்னாள் துணை மேயர்]

பாபநாசம்: [தஞ்சை]
எம். ஏ. முகம்மது சாலிக்

மேலப்பாளையம்: [நெல்லை]
எம். எம். பீர்முகம்மது

இராணிப்பேட்டை: [வ.ஆ.]
எம். ஏ. கபூர்

கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள்!

தி. மு. க.	168
அறிவிக்கப்பட வேண்டிய தொகுதிகள் 27.	
சுதந்திரா— பார்வர்டு பிளாக்	30
இடதுசாரிகம்யூனிஸ்டு	20
முஸ்லீம் லீக்	4
பி. சோ. கட்சி	4
தமிழரசக் கழகம்	2
நல்லசிவம்	1
சி: பா: ஆதித்தன்	4
முடிவாகவேண்டிய தொகுதி	1

அபேட்சகர் பட்டியலில் கோடுபோட்ட இடத்தில் பெயர்களை எழுதிக் கொள்ளுங்கள்!


எமது
பொங்கல்
நல்வாழ்த்துகள்
இந்தப் பொங்கல் திருநாளன்று
ஒவ்வொருவர் மகிழ்ச்சியும் பொங்கி வழியட்டும்.
அப்பொழுது நீடித்து உழைக்கும் அழகு ஆடைகளை
எப்பொழுதும் திறமையுடன் நெய்து கொடுக்கும்
நெசவாளர்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும்
கோ-ஆப்டெக்ஸ் துணிகள் இப்பொழுதும்,
எப்பொழுதும் அளிக்கும்.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
34/1-A, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8.
ELEGANT

நெடுஞ்செழியன்
(திருவல்லிக்கேணி)

கருணாநிதி
(சைதாப்பேட்டை)

மதியழகன்
(ஆயிரம் விளக்கு)

அரங்கண்ணல்
(மைலாப்பூர்)

ஆசைத்தம்பி
(எழும்பூர்)

சத்தியவாணி முத்து
(பெரம்பூர்)

வேதாசலம்
(வண்ணாரப்பேட்டை)

கோவிந்தராஜன்
(புரசைவாக்கம்)

எம். ஆர். கண்ணன்
(பேசின்பிரிட்ஜ்)

எம். ஜி. ஆர்
(பரங்கிமலை)

அண்ணாமலை
(கடம்பத்தூர்)

விஸ்வநாதம்
(செங்கற்பட்டு)

மு. சு. ஆதி
(திருப்போரூர்)

ராஜரத்தினம்
(ஸ்ரீபெரும்புதூர்)

ப. உ. ச.
(திருவண்ணாமலை)

முல்லைவடிவேலு
(வாணியம்பாடி)

சின்னராசு
(திருப்பத்தூர்)

கோவிந்தன்
(செய்யாறு)

முருகையன்
(காவேரிப்பாக்கம்)

முத்துலிங்கம்
(வந்தவாசி)

இராமசாமி
(அரக்கோணம்)

சண்முகம்
(விழுப்புரம்)

தங்கவேலு
(திண்டிவனம்)

இராமச்சந்திரன்
(பண்ருட்டி)

இராஜாங்கம்
(குறிஞ்சிப்பாடி)

பாலகிருஷ்ணன்
(வானூர்)

பச்சையப்பன்
(சங்கராபுரம்)

பொன்.சொக்கலிங்கம்
(சிதம்பரம்)


செல்வராஜ்
(விருத்தாசலம்)

கணேசன்
(செம்பனார்கோயில்)

கிட்டப்பா
(மாயூரம்)

கிருஷ்ணமூர்த்தி
(குடவாசல்)

எல்.கணேசன்
(ஒரத்தநாடு)

மீனாட்சிசுந்தரம்
(வேதாரண்யம்)

கோவிந்தராசன்
(கந்தர்வக்கோட்டை)

கிருஷ்ணமூர்த்தி
(பேராவூரணி)

துரைராசன்
(அறந்தாங்கி)

எம்.எஸ்.மணி
(திருச்சி-1)

தர்மலிங்கம்
(கடலூர்)

தியாகராஜன்
(புதுக்கோட்டை)

அழகமுத்து (உப்பிலியாபுரம்)

இராமசாமி (அரியலூர்)

ஆறுமுகம் (வீரபாண்டி)

முத்துசாமி (நாமக்கல்)



நல்லமுத்து (சங்கரி)

வேலப்பன் (கதிராமங்கலம்)

சின்னசாமி (ஏற்காடு)

வி.எஸ்.எஸ்.மணி (ஆத்தூர்)

இராஜலிங்கம் (கம்பம்)

கிருஷ்ணமூர்த்தி (பழனி)

மாணிக்கம் (வண்ணாரம்)

சீராமலு (காவேரிப்பட்டணம்)

இராஜா (பவானி)

வேலுசாமி (காங்கயம்)

துரைசாமி (திருப்பூர்)

மாதவன் (திருப்பத்தூர்)

சீனிவாசன் ([illegible])

[illegible] ([illegible])

எம்.பி.சாரதி (வேலூர்)

எம்.சி.பாலன் (நாகர்கோவில்)

கூட்டணி வேட்பாளர்கள்

ம.பொ.சி.
(தியாகராயநகர்)

அப்துல்லாபெய்க்
(துறைமுகம்)

ஹண்டே
(பூங்காநகர்)

சீமைச்சாமி
(மானாமதுரை)

மூக்கையாதேவர்
(உசிலம்பட்டி)

பாராளுமன்ற வேட்பாளர்கள்

அறிஞர் அண்ணா
(தென்சென்னை)

சி. மனோகரன்
(வடசென்னை)

சிவசங்கரன்
(ஸ்ரீபெரும்புதூர்)

அரூர் முத்து
(திருப்பத்தூர்)

குசேலர்
(வேலூர்)

தெய்வீகன்
(கள்ளக்குறிச்சி)

இராசாராம்
(சேலம்)

கந்தப்பன்
(மேட்டூர்)

நாராயணன்
(பொள்ளாச்சி)

தண்டபாணி
(தாராபுரம்)

சுவாமிநாதன்
(கோபி)

சோமசுந்தரம்
(தஞ்சை)

சுப்ரவேலு
(மாயூரம்)

வெ. கிருஷ்ணமூர்த்தி
(கடலூர்)

இளைஞர்கள் கையில் வாக்குச் சீட்டு!

1957-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முறையாகத் தேர்தலில் போட்டியிட முன்வந்த போது காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேரும் நம்மைப் பார்த்து கிண்டலும், கேலியும் செய்து வந்தார்கள் !

உங்களிடம் யார் இருக்கிறார்கள்? பதினைந்து வயது நிரம்பாத பள்ளிப் பையன்களும், முகத்தில் மீசை முளைக்காத பொடியன்களும் தானே இருக்கிறார்கள் ! அவர்களிடம் ஓட்டுச் சீட்டா இருக்கிறது? பாவம்! யாரை நம்பி இந்த அண்ணாதுரை போட்டி போடப் போகிறாரோ தெரியவில்லை'' என்று எல்லோருமே நம்மைப் பார்த்து நையாண்டி செய்து வந்தார்கள் !

இப்போது அந்தக் கட்டம் வந்துவிட்டது ! காமராஜர் சொன்ன பொடியன்கள் பெரியவர்களாகி விட்டார்கள் ! பள்ளி சென்ற பாலகன் பக்குவம் அடைந்து விட்டான் ! அரும்பு மீசை முளைத்த அந்த வாலிபன் கையிலே ஓட்டுச் சீட்டும் வந்து விட்டது ! இப்போது உன் கதி என்ன ?

மைனர்கள் மேஜராகிவிட்டார்கள்! மமதை கொண்ட காங்கிரஸ் கட்சியே உனக்கு வாழ்வு எங்கே ?

காங்கிரஸ்காரர்களைப் பார்த்து நாம் இப்போது இப்படிக் கேட்க விரும்புகிறோம் !

காமராஜர் தனது தூய தெள்ளு தமிழில்—''மொட்டைப் பசங்க கட்சி தேர்தலில் நிற்கப் போகிறதாம்'' என்று கிண்டல் செய்து வந்தார் !

நாம் அப்போது காங்கிரஸ்காரர்களின் கன்னத்தில் அறைவது போல் இதற்குப் பதில் சொல்லி வந்தோம் !

''மைனர்கள் எப்போதும் மைனர்களாக இருக்க மாட்டார்கள் ! ஒரு காலத்தில் மேஜராகியே தீருவார்கள்! பத்தாண்டு காலம் போனால் அவர்கள் முகத்திலே மீசை முளைக்கும் ! மீசை முளைத்தால் உன் கதி என்னவாகும்'' என்று நமது அண்ணா அவர்கள் அந்தப் பேதைகளைப் பார்த்துக் கேட்டார்கள் !

தி. மு. கழகத்திற்கு

65

இலட்சம்

வாக்குகள் கிடைக்கும் !

உனக்கு வாக்களித்தவர்களின் காலம் முடிந்து விட்டது! எங்களுக்கு வாக்களிக்கப் போகின்றவர்களின் காலம் ஆரம்பமாகி விட்டது ! இனியும் கழக வெற்றியில் உனக்குச் சந்தேகமா ?

சந்தேகம் இருந்தால் ஓட்டர்களின் பட்டியலைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார் !

இன்று மிகப் பெரும்பாலான வாக்குச் சீட்டுகள் ! இளைஞர்கள் கையில் என்பதை நீ தெரிந்து கொள்வாய் ! அதன் பின்பாவது உன் கொட்டம் அடங்கட்டும் !

இன்றுள்ள ஓட்டர்களின் பட்டியல், ''காங்கிரஸ் கட்சியே ! நீ ஜாக்கிரதை, ஜாக்கிரதை

காமராஜர் சொன்ன கெடு முடிகிறது

என்று எச்சரிக்கை செய்யும் பட்டியலாகும் !

தமிழகத்தில் மொத்தம் ஏறத்தாழ இரண்டு கோடியே எட்டு இலட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இந்தத் தேர்தலில் ஓட்டளிக்க இருக்கின்றனர் !

இந்த வாக்காளர்களில் ஒரு கோடியே 75 இலட்சம் பேர் நாற்பத்தி இரண்டு வயதிற்கும் குறைந்தவர்கள் !

அதாவது மொத்த வாக்காளர்களில் 42 வயதிற்கும் குறைந்தவர்கள் 83 சத வீகிதமாகும் !

1967 தேர்தலில் முதன் முறையாக ஓட்டளிக்கப் போகின்றவர்களின் எண்ணிக்கை 26 இலட்சம் பேராகும் !

அதாவது மொத்த ஓட்டர்களில் எட்டில் ஒரு பங்கினர் முதன் முறையாக ஓட்டளிக்கப் போகின்றார்கள் !

இன்று முதன் முறையாக ஓட்டளிக்கப் போகின்ற இந்த 26 இலட்சம் ஓட்டர்களும் யார் ? அன்று மீசை முளைக்காமல் இருந்த பொடியன்கள் ! இன்று மீசை முளைத்த இளைஞர்கள் ! இவர்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டளிப்பார்கள் ?

மற்றொரு 8 சத விகிதத்தினர் இரண்டாவது முறையாக ஓட்டளிப்பவர்கள் ! சுமார் பத்து சத விகிதத்தினர்தான் மூன்றாவது முறையாக ஓட்டளிப்பவர்கள் !

1952ல்-ல் இருந்த ஓட்டர்கள் இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டார்கள் !

மொத்தத்தில் முப்பது சத விகிதத்தினர் மிக இளமையான வாக்காளர்களாக இருக்கிறார்கள் !

அதாவது இந்தத் தேர்தலின் முடிவை நிர்ணயிக்கப் போகின்றவர்கள் இளைஞர்கள் தான் என்பது தெளிவாகத் தெரிந்து விட்ட விஷயமாகும் !

அந்த இளைஞர்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள், எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை ! அது காங்கிரஸ்காரர்களுக்கே புரியும் !

முதன் முறையாக வாக்களிக்கப் போகின்ற 26 இலட்சம் இளம் வாக்காளர்களில் பெரும்பாலோர் கழகத்திற்கே வாக்களிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை !

இளைஞர்கள் வாக்குகள் மட்டும் அல்ல ஆட்சியாளர்களின் கேடுபாடுகளை அனுபவித்து வாழ முடியாதவர்களாகத் தவிக்கும் முதியவர்களில் பெரும்பாலோரும் இந்தத் தடவை கழகத்திற்கே வாக்களிப்பார்கள் என்பதிலும் சந்தேகம் இருக்க முடியாது !

1962-ல் கழகம் பெற்ற 34 இலட்சம் வாக்குகள்—

இப்போது புதிதாக வாக்களிக்கப் போகின்ற 26 இலட்சம் இளம் வாக்காளர்களில் நமக்குக் கிடைக்கப் போகின்ற பெரும்பான்மையான வாக்குகள் !

கழகத்தின் வெற்றியில் என்ன சந்தேகம்?

காங்கிரஸ்காரர்களின் கொடுமைகளால் குமுறிக் கிடக்கும் முதியவர்களின் வாக்குகள்—

அனைத்தையும் கூட்டினால் கழகத்திற்கு ஏறத்தாழ 65 இலட்சம் வாக்குகள் நிச்சய மாகக் கிடைக்கக் கூடும்! இதில் கொஞ்சம் குறைத்து மதிப்பிட்டாலும் 60 இலட்சம் வாக்கு களாவது கழகத்திற்குக் கிடைக்கக் கூடும்!

இப்படி மிகப் பெரும் எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்று கழகம் மாபெரும் வெற்றியை ஈட்டிடும் வலிவைப் பெற்றிருக்கிறது!

இப்படிக் கழகம் அறுபது, அறுபத்தி ஐந்து இலட்சம் வாக்குகளைப் பெற்றுவிட்டால் அது தான் ஆளுங்கட்சியாக வரும், வரமுடியும்!

சென்ற தேர்தலில் 58 இலட்சம் வாக்கு களைப் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு இந்தத் தடவை கொஞ்சமும அதிக ஓட்டுகள் கிடைக்கா மலா போய் விடும்! அப்படிக கிடைத்தால் அந்த காங்கிரஸ் கட்சிக்கும் ஆளுங்கட்சியாக வரும் வாய்ப்பு இருக்குமே" என்று சில நண்பர் கள் கேட்கக் கூடும்!

இந்தத் தடவை காங்கிரஸ் கட்சிக்கு அதிக ஓட்டுகள் கிடைக்க கொஞ்சமும் நியாயமில்லை! அது மட்டும் அல்ல சென்ற தடவைக் கிடைத்த ஓட்டுகளைக் காட்டிலும் குறைவான ஓட்டுகளைத் தான் அது பெற முடியும்! இதில் கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம்!

1962-ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சி 206 இடங்களிலும் போட்டியிட்டு மொத்தம் பெற்ற வாக்குகள் 58,15,878 வாக்குகளாகும்!

கழகம் அப்போது 142 இடங்களில் போட்டியிட்டு மொத்தம் பெற்ற வாக்குகள் 34,14,657 வாக்குகளாகும்!

காங்கிரஸ் கட்சிக்கும், தி.மு. கழகத்திற்கும் உள்ள ஓட்டு வித்தியாசம் 24 இலட்சம் ஆயிற்றே என்று கணக்குப் போட்டு சிலர் மலைக்கக் கூடும்!

இதில் மலைப்பதற்கு எதுவும் இல்லை! ஓட்டு வித்தியாசத்தைப் பார்க்கும்போது போட்டியிட்ட தொகுதி வித்தியாசத்தையும் பார்க்க வேண்டும்!

காங்கிரஸ் போட்டியிட்ட தொகுதிகள் 206. கழகம் போட்டியிட்ட தொகுதிகள் 142 தான்! கழகம் 64 தொகுதிகளில் போட்டி யிடவில்லை! இதனால் தான் இவ்வளவு பெரிய வித்தியாசமாகும்!

கழகத்தின் செல்வாக்கை அறிந்துகொள்ள நீங்கள் இன்னொரு கணக்கையும் போட்டுப் பார்க்க வேண்டும்!

கழகம் போட்டியிட்ட அந்த 142 இடங் களில் காங்கிரஸ் கட்சி எவ்வளவு ஓட்டுகளைப் பெற்றிருக்கிறது என்பதையும் கவனிக்க வேண் டும்!

கழகம் போட்டியிட்ட 142 இடங்களில் காங்கிரஸ் கட்சி பெற்ற ஓட்டுகள் 39,02,264

காங்கிரஸ் கட்சியின் வலிவு சிதைந்தே போகும்!

ஓட்டுகள்தான்! அதாவது காங்கிரஸ் கட்சி தி. மு. கழகத்தை விட ஏறத்தாழ ஐந்து (4,87.607) இலட்சம் ஓட்டுகளைத்தான் அதிகமாகப் பெற்றிருக்கிறது!

தி. மு. கழகம் போட்டியிடாத 64 தொகுதிகளில்தான் காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ 19 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது!

கழகம் சென்ற தேர்தலில் இன்னும் அதிக இடங்களில் போட்டியிட்டிருந்தால் இன்னும் அதிக வாக்குகளைப் பெற்றிருக்க முடியும்!

1962-ல் நடைபெற்ற தேர்தல் கணக்கை ஆராய்ந்து பார்த்தாலும் காங்கிரஸ் கட்சிக்கு அப்படி ஒன்றும் சிறப்பான செல்வாக்கு இருப்பதாகச் சொல்ல மாட்டார்கள்!

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கைப் பற்றி எல்லோருக்குமே தெரியும்!

இந்தத் தேர்தலில் புதிதாக, முதன் முறையாக வாக்களிக்கப் போகும் இளைஞர்கள் ஓட்டு காங்கிரஸ் கட்சிக்கு அறவே கிடைக்கப் போவதில்லை! அதே போல் முதியவர்கள் ஓட்டிலும், மற்றவர்களின் ஓட்டிலும் ஒரு பெரும் பகுதியை காங்கிரஸ் கட்சி இழக்கத்தான் போகிறது!

சென்ற பொதுத் தேர்தலின் போது ஓட்டளித்தவர்களின் தொகை கணிசமான அளவுக்குக் குறையும் என்பதோடு, புதிய வாக்காளர்களின் ஓட்டுகளையும் காங்கிரஸ் கட்சியால் பெற முடியாது!

எனவேதான் காங்கிரஸ் கட்சி குறைவான வாக்குகளையும், கழகம் மிக அதிகமான வாக்குகளையும் பெறமுடியும் என்று திடமாகவும், திட்டவட்டமாகவும், உறுதியாகவும் கூறிட முன் வந்திருக்கிறோம்!

உணர்ச்சியால் உந்தப்பட்டோ, ஆர்வத்தாலோ, கட்சிப்பற்றுதலாலோ இதைக் கூறுவதாக யாரும் நினைக்க வேண்டாம்!

உள்ள நிலைமையைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறோம்!

இப்படிச் சொல்லுவது எதிரிகளுக்குக் கசப்பாகத்தான் இருக்கும்! ஆனால் என்ன செய்வது! இதுதான் உண்மையான நிலை!

அவர்களுக்காக இதை நாங்கள் சொல்லவும் முன் வரவில்லை! அவர்கள் இந்த உண்மை நிலையை அறியாதவர்களாகவும் இருக்க முடியாது!

அவர்கள் எப்படி இருந்தாலும் நாம் கவலைப்படப் போவதும் இல்லை!

பொதுமக்களும், கழகத் தொண்டர்களும் மற்ற மற்றவர்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொண்டு மேலும் மேலும் சிறப்பாகப் பணிபுரிய வேண்டும் என்பதற்காகத்தான் இதனைக் கூற முன் வந்துள்ளோம்!

கழகத்திற்கு இப்படி நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் கழகத் தொண்டர்கள் அயராது பணி புரிந்து ஆட்சியைக் கைப்பற்ற முன்வர வேண்டும்!

தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை! உடனடியாக தொகுதி தொகுதியாக, வீடு வீடாக மக்களைச் சந்தித்து மேலும் மேலும் அவர்களுடைய நல்லாதரவைத் திரட்ட வேண்டும்!

தேர்தல் முடிகின்ற வரையில் உங்களுக்கு வேறு எந்த சிந்தனையும் இருக்கக் கூடாது! தேர்தல் பணியிலேயே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்!

இப்படி நீங்கள் பணியாற்றினால் தமிழ் நாட்டில் தி. மு. க. மந்திரி சபை அமைவது உறுதியிலும், உறுதியாகும்!

நண்பர்களே! உற்சாகத்தோடு பணியாற்றுங்கள்! நாட்டிலே நல்லாட்சி மலரட்டும்!

கழகத் தொண்டர்களின் கவனத்திற்கு!

தொண்டர்கள் தேர்தல் பணிபுரியும் நேரத்தில் ஒரு உண்மையைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்!

நாம் தேர்தல் களத்தில் சந்திக்கப்போகின்ற எதிரி வலிவு மிக்க எதிரியல்ல, சூழ்ச்சி மிகுந்த எதிரி என்பதை மறந்து விடக் கூடாது!

வலிவு மிக்க எதிரியைச் சந்திப்பது எளிது, நாமும் வலிவு பெற்றிருப்பதால்! ஆனால் சூழ்ச்சி மிகுந்த எதிரியை சந்திப்பது அவ்வளவு எளிதல்ல! காரணம் நம்மிடம் சூழ்ச்சி இல்லாத காரணத்தால்!

காங்கிரஸ் கட்சி எப்போதுமே தன் வலிவின் மூலம் வெற்றி பெற்று வரவில்லை! சூழ்ச்சியின் மூலமே வெற்றி பெற்று வந்திருக்கிறது!

அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓட்டர்களை மிரட்டுவது!

ஓட்டர்களை விலைக்கு வாங்குவது!

பணம் கொடுத்த ஓட்டர்களிடம் ஆண்டவன் மீது சத்தியம் செய்யச் சொல்லுவது!

ஓட்டர்களை ஓட்டுச் சாவடிக்குச் செல்ல விடாத நிலையை உண்டாக்குவது!

பொய்யான ஓட்டுகளைத் திரட்டி வந்து போடச் செய்வது!

எதிர்க்கட்சிக்காரர்களுக்கு பல்வேறு ஆசைகளை ஊட்டி அவர்களை துரோகச் செயலில் ஈடுபடுத்துவது!

அந்தத் துரோகச் செயலை வைத்துக் கொண்டு கட்சியைத் தூற்றுவது!

இப்படிப்பட்ட வஞ்சகச் செயல்மூலம்தான், இப்படிப்பட்ட சூழ்ச்சி வேலைகள் மூலம்தான் காங்கிரஸ் கட்சியால் வெற்றி பெற முடியும்!

இந்தச் சூழ்ச்சியை வலிவின் மூலம் முறியடிக்க முடியுமா? முடியாது! ஒரு நாளும் முடியாது! ஆனால் தொண்டர்களின் விழிப்புணர்ச்சியின் மூலம் இதைத் தூள் தூளாக்கிக் காட்ட முடியும்!

தொண்டர்கள் தேர்தலுக்கு முதல் நாள் வரை வீடு வீடாகச் சென்று காங்கிரஸ் கட்சியின் கேடுபாடுகளை விளக்கிச் சொல்லி மக்களுக்கு உண்மையை புரிய வைக்க வேண்டும்!

மறுநாள்—தேர்தல் நாளன்று தொண்டர்கள் அணி அணியாகப் பிரிந்து நாலாபக்கங்களிலும் சென்று ஓட்டர்களை ஓட்டுச் சாவடிக்கு அழைத்துச் செல்லும் பணியில் ஈடுபட வேண்டும்!

காலை ஆறு மணிக்கே நம்முடைய வாக்காளர்கள் வாககுச் சாவடி முன்பு க்யூ வரிசையில் நிற்க வேண்டும்! மூன்று மணிக்குப் பார்த்துக் கொள்ளலாம், மாலையில் பார்த்துக் கொள்ளலாமே என்ற எண்ணமே இருக்கக் கூடாது! இதுதான் மிக மிக முக்கியமானதாகும்!

ஒரு தொண்டரணி ஓட்டுகளைச் சேகரிக்கும் பணியிலே ஈடுபட வேண்டும்!

மற்றொரு தொண்டரணி காங்கிரஸ் கட்சியின் போக்கை சி. ஐ. டி.களைப் போல கண்

காங்கிரஸ் கட்சி வெற்றி பெறும் மர்மம் என்ன?

காணிக்க வேண்டும்! யாருக்காவது பணம் கொடுத்தால், எங்கிருந்தாவது ஓட்டர்களைக் கொண்டுவந்தால் அவர்களைக் கையோடு பிடித்து போலீசாரிடம், தேர்தல் அதிகாரியிடம் ஒப்புவிக்க வேண்டும்!

ஓட்டுச்சாவடியில் நமது அபேட்சகருக்காக பணியாற்றுகின்ற ஏஜண்டுகள் (பிரதிநிதி) இந்த விஷயத்தில் மெத்த கவனத்தோடு பணியாற்ற வேண்டும்!

முத்தனுக்குப் பதில் குப்பனைக் கொண்டு வந்து ஓட்டளிக்க வைப்பார்கள்! இறந்துவிட்ட சுப்பனுக்குப் பதில் அப்புசாமியை ஓட்டளிக்க வைப்பார்கள்! இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு ஓட்டுச் சாவடியில் பணியாற்றுகின்ற ஏஜண்டுகளின் பொறுப்பாகும்!

பெரிய நகரப் பகுதிகளில் இது சகஜமாக நடக்கும்!

ஓட்டுச் சாவடியில் பணியாற்றுகின்ற நமது ஏஜண்டுகள் எல்லோருக்கும் தெரிந்தவர்களாகவும், எல்லோரையும் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்!

நகரப் பகுதிகளில் மட்டும் அல்ல கிராமப் பகுதிகளிலும் கள்ள ஓட்டுகளைத் தடுக்கும் பொறுப்பு, செத்த ஓட்டுகளைத் தடுக்கும் பொறுப்பு அந்தந்த ஓட்டுச்சாவடிகளில் பணிபுரிகின்ற ஏஜண்டுகளின் பொறுப்பாகும்! இதை மறக்காமல் நம்முடைய ஓட்டுச்சாவடி ஏஜண்டுகள் பணியாற்ற வேண்டும்!

அடுத்தபடியாக ஒரு ஓட்டுச் சாவடியில் கழகத்திற்கு அதிகமான ஓட்டுகள் விழ ஆரம்பித்தால் அந்த ஓட்டுச்சாவடியில் காங்கிரஸ்காரர்கள் கலகத்தை உண்டாக்க முயற்சிப்பார்கள்! நம்மைப்பற்றி எதையாவது திட்டிப்பேசி நமக்கு ஆத்திரத்தை உண்டாக்கி கலக மூட்ட எண்ணுவார்கள்!

அப்படிக் கலகம் ஏற்பட்டால் ஓட்டுச் சாவடிக்கு யாரும் வரமாட்டார்கள், கழகத்திற்கு ஓட்டும் கிடைக்காத நிலை ஏற்பட்டு விடும் என்ற எண்ணத்தில் காங்கிரஸ்காரர்கள் இதைச் செய்யத் தவற மாட்டார்கள்! இதற்குக் கழகத் தொண்டர்கள் பலியாகக் கூடாது!

காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு ஆத்திரப்பட்டிருந்தாலும், எவ்வளவு வெறித்தனமாகப் பேசினாலும் நாம் மௌனமே சாதிக்க வேண்டும்! கலகம் விளைந்தால் அவர்களுக்கே அது வெற்றியாகிவிடும்!

அவர்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள்! அவர்கள் எதைச் செய்தாலும் கேட்பதற்கு ஆட்கள் இருக்கமாட்டார்கள்! நமக்கு நியாயம் கிடைக்கும், நீதி கிடைக்கும் என்ற எண்ணத்தை நாம் அறவே விட்டுவிட வேண்டும்!

"தேர்தல் நேரத்தில் நீதி கிடைக்கக் கூடாது, நியாயம் கிடைக்கக் கூடாது, அநியாயமே நடக்க வேண்டும், அதன் மூலம் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற வேண்டும்" என்ற எண்ணத்தில்தான் காங்கிரஸ் கட்சி பதவியை ராஜினாமா செய்யாமல் அதிகாரத்தில் இருந்து கொண்டே போட்டியிடுகிறது! இது ஜனநாயகத்திற்கே புறம்பானது என்று பலர் எடுத்துச் சொல்லியும்கூட அவர்கள் பதவியை ராஜினாமா செய்ய முன்வரவில்லை! இந்த நிலையில் நமக்கு எப்படி நியாயம் கிடைக்கும்!

அவர்கள் ஆட்சியில் இருப்பதால் அதிகாரிகள் நியாயம் வழங்க, நீதி வழங்க பயப்படுகிறார்

இப்படிப் பணியாற்றுங்கள் நமக்கு வெற்றி நிச்சயம் !

கள் ! இதனால் அதிகாரிகள் மீது குற்றம் சாட்டுவதிலும் பயனில்லை ! நாம்தான் ஜாக்கிரதையாகப் பணியாற்ற வேண்டும் ! இதை எந்த நேரத்திலும் கழகத் தொண்டர்கள் மறந்துவிடக் கூடாது !

தேர்தலில் கழகம் வெற்றிபெற வேண்டும்! தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும் ! அதன் மூலம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில்தான் தொண்டர்கள் பணியாற்ற வேண்டும் !

அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்லுவார்களே ''நாம் செல்வது புலி வேட்டைக்கு, எலி வேட்டைக்கு அல்ல'' என்று ! அதை நாம் மறந்து விடக் கூடாது !

மீண்டும் உங்களுக்கு நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை ! தேர்தல் நெருங்கிவிட்டது ! இப்போதே வீடு விடாகச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்ய ஆரம்பியுங்கள் !

தேர்தல் தினத்தன்று கவனத்தோடும், உன்னிப்போடும், பொறுப்போடும் பணியாற்ற வேண்டும் !

அதிகாலையிலே ஓட்டுச்சாவடிக்கு ஓட்டர்களை அழைத்துச் செல்வது முக்கியம் !

ஓட்டர்களை விலை கொடுத்து வாங்காமல் கண்காணிப்பது அதைவிட முக்கியம் !

செத்த ஓட்டுகளை, கள்ள ஓட்டுகளைத் தடுப்பது அதை விட முக்கியம் !

ஓட்டுச்சாவடியில் கலகம் ஏற்பட்டால் அமைதியைக் காப்பது அதை விட முக்கியம் !

காங்கிரஸ்காரர்கள் எந்த உருவில் இருப்பார்கள் என்பதை நம்மால் கண்டு பிடிக்க முடியாது !

ரௌடிகள் உருவில் கலகம் விளைவிக்கக் கூடும் ! அதைத் தடுப்பது, அதைத் தவிர்ப்பது மிக மிக முக்கியம் !

காங்கிரஸ்காரர்கள் நம்மவர் போலவே நடித்து நம்முடைய ஓட்டுகளைத் தட்டிப் பறிக்க முயலவார்கள் ! அதையும் தடுக்க வேண்டும் !

ஓட்டுச் சாவடியில் பேச்சு அதிகம் இருக்கக் கூடாது ! செயலே அதிகமாக இருக்க வேண்டும் !

நாம் என்ன செய்கிறோம் என்று எதிரிக்குத் தெரியக் கூடாது !

நம்முடைய கவனமெல்லாம் எதிரிகளின் சூழ்ச்சி மீதும், அவர்கள் வஞ்சகச் செயல் மீதும் இருக்க வேண்டும் ! அதைத் தடுப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் !

நம்முடைய ஓட்டுகள், நம்முடைய ஆதரவு ஓட்டுகள் அத்தனையும் நமக்குக் கிடைக்கும்படியும் நாம் பணியாற்ற வேண்டும் !

தொண்டர்கள் இந்த முறையிலே பணியாற்றினால் வெற்றி நிச்சயம் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை !

★



இதற்குப் பெயர்தான் ஜனநாயக சோஷலிசமா?

நாட்டிலே ஜனநாயக சோஷலிசத்தை உரு வாக்குவதே காங்கிரஸ் கட்சியின் இலட்சியம் என்று சொல்லி வருகிறார்கள் !

ஏழை—பணக்காரன் பேதத்தை ஒழித்து விட்டு எல்லோருக்கும் சமவாழ்வு அளிப்பதற் காக காங்கிரஸ் கட்சி மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதாகவும் கூறி வருகிறார்கள் !

சோஷலிசப் பிதா காமராஜர் இதற்காகவே உயிர் வாழ்ந்து வருவதாகவும் அவரது எடுபிடி கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர் !

ஆனால் உண்மையில் காங்கிரஸ் கட்சி ஜன நாயக சோஷலிசத்தை மலர வைக்கப் போகும் கட்சியா ? காமராஜரும் சோஷலிசப் பிதாவா? ஏழையின் பங்காளரா ? என்பதைப் பொது மக் கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் !

காதிலே குண்டலமும், கழுத்திலே உத்தி ராட்சமும், இடையிலே காவியும், நெற்றியிலே விபூதி பட்டையும் அணிந்து பகலிலே பரமனை வேண்டிக் கிடந்த ஒரு சந்நியாசி — இரவிலே இன்பவல்லியோடு சரசமாடி இன்பரசத்தைப் பருகிய ஒரு காட்சியை நீங்களெல்லாம் அறிஞர் அண்ணாவின் வேலைக்காரி படத்திலே பார்த் திருப்பீர்கள் என்றே நினைக்கிறோம் !

அந்தச் சாமியார் பகலிலே அரஹரா கோஷமும், இரவிலே கண்ணே, மணியே, கனி ரசமே, கற்கண்டே என்ற காதல் மொழி பேசி யதையும் போல—

நமது சோஷலிச பிதா காமராஜர் மேடை யிலே ஏழைகளுக்காக கண்ணீர் வடிப்பதும், மேடையை விட்டு கீழே இறங்கியதும் பணக் காரன் கையைக் குலுக்கி அவன் தரும் காகிதப் பண நோட்டுகளைப் பரிசாகப் பெற்று கொள் வதையும் பொது மக்கள் அறியாமல் இருக்க முடியாது !

காங்கிரஸ்காரர்களை அப்படிச் சொல்வதற்கு என்ன சாட்சி, என்ன ஆதாரம் என்று சிலர் கேட்கலாம் ! ஆதாரங்களை அடுக்கி அடுக்கி கோடிக்கணக்கில் காட்ட முடியும் !

சென்ற 1-8-62 முதல் 31-3-66 வரை காங்கிரஸ் கட்சி மிகப் பெரிய பண முதலைகளி டம் பெற்ற நன்கொடை 1,09,60,365 ரூபாயா கும் ! இது கணக்கில் வந்த தொகையாகும் ! கணக்கில் வராமல் பல கோடி இருக்கும் என்பதி லும் சந்தேகம் இருக்க முடியாது !

முதலாளிகளிடம் கோடிக் கணக்கில் பணத்தை வாங்கி, தேர்தலில் ஓட்டுகளை விலைக்கு பெற்று ஆட்சியில் அமரும் காங்கிரஸ் காரர்கள் ஏழைகளுக்கு வாழ்வளிப்பார்களா? பணக்காரர்களுக்கு வாழ்வளிப்பார்களா ? பொது மக்கள்தான் சிந்தித்துப் பார்க்க வேண் டும் !

கணக்கில் வந்த நன்கொடை !

காங்கிரஸ் கட்சி	1,09,60,365
சுதந்திரா	15,99.424
பிரஜா சோஷலிஸ்ட்	57,155
குடியரசு கட்சி	25,000
காஷ்மீர் நேஷனல்கான்பரன்ஸ்	12,000
கணதந்திர பரிசத்	12,000
ஜனசங்கம்	6,985
கம்யூனிஸ்டு	3,174
இந்துமகா சபை	1,151
சோஷலிஸ்ட்	738
ஜண்டா பரிபத்	500
தி. மு. கழகம்	301

காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ ஒரு கோடியே ஒன்பது இலட்சம் நன்கொடை பெற்றிருக்கிறது! இந்தத் தேர்தலுக்காக ஒரு கோடிக்கு மேல் வசூல் செய்து இருப்பார்கள் !

இப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியா ஏழை களைக் காப்பாற்ற முன் வரும் ! பொது மக்கள் சிந்தித்து காங்கிரஸ் கட்சியை விரட்டியடிக்க முன் வரவேண்டும் !

வீணர்கள் ஆட்சியில் விலை ஏற்றத்தைப் பாரீர்!

விலைவாசியைப்பற்றி நினைத்துப் பார்க்காதவர்கள் இந்த நாட்டில் எவருமே இருக்க முடியாது! குறிப்பாக இந்தக் கொடுமையான விலை ஏற்றத்தைக் கண்டு ஒவ்வொரு தாய்மார்களும் கண்ணீர் வடித்துக்கொண்டுதான் வருகிருர்கள்! எப்படி வாழ்வோம் என்று தவியாய் தவிக்கிருர்கள்!

இந்த நாட்டை கொள்ளையடிப்பதாகச் சொன்ன வெள்ளைக்காரன் காலத்தில் கூட இப்படிக் கொடுமையான விலை ஏற்றம் இல்லை! இந்தக் காங்கிரஸ் காரர்கள் பதவி ஏற்ற பின்புதான் முப்பது பங்கு, ஐம்பது பங்கு, நூறு பங்கு விலை ஏறி இருக்கிறது! காரணம் என்ன?

காங்கிரஸ்காரர்களைக் கேட்டால் ஜனத்தொகைப் பெருகிவிட்டது என்று கூறுகிறுர்கள்! இதனுல் விலைவாசி ஏறி விட்டதாகச் சொல்லுகிருர்கள் இந்த சொத்தை வாதத்தை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது!

வெள்ளைக்காரன் வெளியேறியபோது இந்த நாட்டின் மொத்த ஜனத்தொகை ஏறத்தாழ நற்பது கோடியாகும்! அப்போது பாகிஸ்தான் தனியாகப் பிரிந்த காரணத்தால் இந்த நாட்டின் ஜனத்தொகை 31 கோடியாகக் குறைந்தது!

இப்போது மொத்த ஜனத்தொகை ஏறத்தாழ 45 கோடியாகும்!

வெள்ளைக்காரன் காலத்தைவிட இப்போது அதிகமாக இருப்பவர்கள் ஏறத்தாழ ஐந்து கோடி மக்கள்தான்!

இப்படி அதிகமாகப் பெருகிவிட்ட 5 கோடி மக்களைக் காட்டி விலைவாசி ஏறிவிட்டது என்ருல் எந்த முட்டாள்தான் நம்புவான்! அப்படியானுல் உற்பத்தி பெருக வில்லையா? 29 ஆயிரம் கோடி ரூபாயை செலவிட்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட டியும் உற்பத்தி பெருக வில்லை என்ருல் இந்தத் திட்டங்களை எதற்காகத் தீட்ட வேண்டும்!

வெள்ளைக்காரன் காலத்தை விட அதிகமாகப் பெருகிய ஜனத் தொகை ஏறத்தாழ ஐந்து கோடிதான்! இந்த ஐந்து கோடி மக்களுக்குக் கூட இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் பயன் தரமுடியவில்லை என்ருல் கடலில் தூக்கி எறிவதுதானே நியாயமாகும்!

உற்பத்தியைப் பெருக்காமல் அதன் மூலம் விலை வாசி ஏற்றத்தைக் குறைக்காமல் வெளி நாடுகளில் கடனை வாங்கி, உள்நாட்டில் மக்களை வரியின் மூலம் கொள்ளையடித்து ஏன் ஊதாரித்தனம் செய்ய வேண்டும்!

காங்கிரஸ் ஆட்சியின் ஊதாரித் திட்டங்கள். வெளி நாடுகளில் வாங்கிய கடன், வரிச்சுமை, மலை போல நோட்டடிக்கும் முறை போன்ற காரணங்களால்தான் இந்த நாட்டில் விலைவாசி மிக மிகப் பெரும் அளவில் உயர்ந்திருக்கிறது!

வெள்ளைக்காரன் எந்தத் திட்டத்தையும் போடாமல் இப்படி கோடி கோடியாய் வரியையும் விதிக்காமல் எப்படி மக்களை வாழ வைத்தான்! அவனிடத்தில் மந்திரக்கோல்இருந்ததா? மாய ஜால வித்தை இருந்ததா?

கண்ணீர் விட்டு கதறியழும் தாய்மார்களே! வெள்ளைக்காரன் காலத்தில் விலைவாசி எப்படி இருந்தது என்பதையும், இந்தக் கொள்ளையர்கள் காலத்தில் விலைவாசி எப்படி இருக்கிறது என்பதையும் ஒரு முறை இந்தப் பட்டியலைப் படித்து சிந்தித்துப் பாருங்கள்! இப்படிப்பட்ட அநியாய ஆட்சி நமக்குத் தேவைதானு என்பதையும யோசித்துப் பாருங்கள்! யோசித்த பின்பு இந்த ஆட்சியைத் தூக்கி எறியுங்கள்!

			1947-க்கு முன் வெள்ளைக்காரன் காலத்தில்	1966-ல் காங்கிரஸ்காரர்கள் காலத்தில்
ப. அரிசி	படி	...	0— 2—6	3—00
பு. அரிசி	,,	...	0— 2—0	2—75
துவரம் பருப்பு	,,	...	0— 4—0	2—25
உளுத்தம் பருப்பு	,,	...	0— 4—0	2—56
கடலைப் பருப்பு	,,	...	0— 5—0	4—40
பச்சைப் பருப்பு	,,	...	0— 5—0	2—40
உப்பு	,,	...	0— 0—2	0—15
நல்லெண்ணெய்	வீசை	...	0—10—0	7—20
கடலை எண்ணெய்	,,	...	0— 6—0	6—22
தேங்காய் எண்ணயெ்	,,	...	0— 8—0	8—40
அஸ்கா	,,	...	0— 6—0	2—25
பூண்டு	,,	...	0— 3—6	8—40
மிளகு	,,	...	0—10—0	10—10
மிளகாய்	,,	...	0—10—0	11—20
புளி	,,	...	0— 1—6	3—20
ஈரோடு மஞ்சள்	,,	...	0— 5—0	3—80
பாக்கு	,,	...	0—14—0	16—00
மாயவரம் அசல் நெய்	,,	...	3—12—0	11—00
வெல்லம்	,,	...	0— 2—6	2—25
நாட்டு சர்க்கரை	,,	...	0— 3—6	2—40
காப்பிக்கொட்டை	,,	...	0— 8—0	9—00
விறகு குண்டு		...	0— 6—0	3—75
மல் பீஸ்(20 கெஜம்)		...	6— 0—0	27—00
4 முழம் வேஷ்டி		...	0—10—0	2—75
8 முழம் வேஷ்டி		...	1— 8—0	9—20
8 கெஜம் புடவை		...	4— 8—0	22—00
1 கெஜம் சீட்டி		...	0— 6—0	2—50

வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த விலை வாசிக்கும், இப்போது இருக்கும் விலைவாசிக்கும் ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசமாகும்!

வெள்ளைக்காரன் காலத்தில் இப்படி விலை மலிந்திருப்பதை சிலர் நம்பக்கூட மாட்டார்கள்! உண்மையிலே அந்தக் காலம் மக்களுக்கு வாழ் வளித்த பொற்காலமாக இருந்தது!

வெள்ளைக்காரனால் இப்படி எப்படி சிறப் பாக ஆள முடிந்தது?

இந்தக் காங்கிரஸ்காரர்களால் ஏன் இப் படி ஆளமுடியவில்லை!

நாட்டைப்பற்றி கவலைப்படாதவர்கள், மக் களைப்பற்றி நினைத்துப் பார்க்காதவர்கள் ஆட்சி பீடத்தில் இருப்பதால்தான்!

இப்படிப்பட்ட மக்கள் துரோகிகளைத்தூக்கி எறியுங்கள்! அதன் பின்னர் உங்களுக்கு நல் வாழ்வு கிடைக்கும், சுகவாழ்வும் கிடைக்கும்!

★

தந்தி: "KIRKARI" Phone: 23829

பைப்புகள், பைப் இணைப்புகள் இரும்பு சாமான்கள், மெஷினரி உபகரணங்கள், ஆஸ்பெஸ்டாஸ் பெக்கிங் ரோப்&ஷீட் மற்றும் எல்லாவிதமான பெக்கிங் சாமான்களுக்கும்

ஏற்றுமதியாளர்கள்-விற்பனையாளர்கள்

முன்னணி ஸ்டாக்கிஸ்ட்ஸ்:

'LEADER' கன்மெட்டல் பிட்டிங்ஸ்

'VICTOR' கை ஆயுதங்கள் &

SEGHAL SANITARY FITTINGS.

ஆகியன.

காமர்ஸ் யுனிவர்ஸல்

தபால் பெட்டி 1965.

54, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

எல்லோருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

எமது இரண்டு ரூபாய் சர்குலேஷன் கார்டு வாங்கி உங்கள் வீட்டுக்குத் தேவையான எவர்சில்வர் சாமான்கள், டர்லின், டெக்ரான் ஜவுளிகள் மற்றும் நவீன சாதனங்கள் 30 அயிட்டங்களில் ஒன்றைப் பெறுங்கள்.

குளோப் ஹவுஸ் சேல்ஸ்
சர்குலேஷன் டிபார்ட்மெண்டு

MANUFACTURER OF GLOBE TONE RADIOS

போன்: 64005 & 62913.

சென்னை-23.

ஏஜெண்டுகள் தேவை !

தமிழகத்தில் தரமான ஆயுர்வேத மருந்துகளுக்கு
மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஸ்தாபனம்

ஸ்ரீஜெயா பார்மஸி

28, வடக்கு ரத வீதி, திண்டுக்கல்-1

அரிஷ்டங்கள் ஆசவங்களுக்குச் சிறந்தது

நியூ ஜெயா பார்மஸி

15, மதுரை ரோடு, (நாகல் நகர்) திண்டுக்கல்-3.

சகல ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிறந்த இடம்:

சாந்தி பார்மஸி

97, ஆர். எஸ். ரோடு, திண்டுக்கல்-3.

எல்லோருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

"அண்ணாவின் அரசியல் பாதை"

ஒவ்வொரு பேச்சாளர் கையிலும், ஒவ்வொரு கழகத் தோழரின் கையிலும் இருக்க வேண்டிய புத்தகம். தேர்தல் சமயத்தில், என்ன சாதித்தீர்கள் என்று கேட்கும் பித்தர்களுக்கு சவால் சொல்லும் வரலாற்று நூல்

வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

விலை ரூ. 2-00.

தயாரிப்பு:

கே. ஆர். நாராயணன்

131, பிராட்வே :: சென்னை-1.

குறிப்பு: தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 2-50எம்.ஓ. செய்யவும்,

எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

மனதிற்கு மகிழ்வூட்டும் உயர்தர செண்ட், அத்தர் வாசனை திரவியங்களுக்கும், ஊதுபத்திகளுக்கும்

கஜுராவின் பிரெஞ்ச்நைட், 'அனார்கலி' செண்ட்டுகளும், ஹில்ஸ்கிரீன் -தர்பார்-தர்பார் கஜுரா பத்திகளும் மிகச் சிறந்தது.

கஜுராவின் பக்ஸால் '30'
மூட்டைப் பூச்சிகளை அறவே ஒழிக்கின்றது.
இன்றே வாங்குங்கள் !

கிடைக்குமிடம்

**கஜுரா கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்**

138, நைனியப்பன் நாய்க்கன் தெரு,
சென்னை-3. (போன் 33095)

கிளைகள்: 178, பஜார் தெரு (போன் 64)
125, நியூமெட்டல்ரோடு,
விஜயபுரம் திருவாரூர்.

தமிழகத்தில்
பொதுத் தேர்தல் நடக்கும் நாட்கள்!

தமிழகத்தில் நடைபெற இருக்கும் நான்காவது பொதுத்தேர்தல் மூன்று கட்டங்களாக நடைபெறும்!

ஒவ்வொரு கட்டத்திலும் 13 பாராளு மன்றத் தொகுதிகளுக்கும், 78 சட்ட சபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறும்!

முதல் கட்டத் தேர்தல் பிப்ரவரி 15-ம் தேதியும், இரண்டாவது கட்டத் தேர்தல் பிப்ரவரி 18-ம் தேதியும், மூன்ருவது கட்டத் தேர்தல் பிப்ரவரி 21-ம் தேதியும் நடை பெறும்! அதன் விபரமாவது!

முதற் கட்டம் (15-2-67)

மக்கள் சபைத் தொகுதி		சட்டமன்றத் தொகுதிகள்
வட சென்னை	...	வண்ணரைப்பேட்டை, துறைமுகம், பேசின்பிரிட்ஜ், பூங்கா நகர், பெரம்பூர், புரசைவாக்கம்.
தென் சென்னை	...	எழும்பூர், ஆயிரம் விளக்கு, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர், சைதாப்பேட்டை.
திருப்பெரும்புதூர்	...	கும்மிடிப்பூண்டி, பொன்னேரி. திருவொற்றியூர், பறங்கிமலை, குன்னத்தூர், திருப்பெரும்புதூர்.
செங்கற்பட்டு	...	திருப்போரூர், செங்கற்பட்டு, மதுராந்தகம், அச்சரப்பாக்கம், உத்தர மேரூர், காஞ்சிபுரம்.
திருத்தணி	...	கடம்பத்தூர், திருவள்ளூர், திருத்தணி, அரக்கோணம், சோளிங்கபுரம், இராணிப்பேட்டை.
வேலூர்	...	காட்பாடி, குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆம்பூர், கணியம்பாடி, வேலூர்.
வந்தவாசி	...	ஆற்காடு, ஆரணி, செய்யாறு, வந்தவாசி, பெரணமல்லூர், கலசப்பாக்கம்.
கோபி	...	ஈரோடு, பவானி, அந்தியூர், கோபி, சத்தியமங்கலம், பவானி சாகர்.
கரூர்	...	வடமதுரை, வேடசந்தூர், அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராச புரம், கடவூர்.
புதுக்கோட்டை	...	குளித்தலை, விராலிமலை, திருமயம், ஆலங்குடி, புதுக்கோட்டை, காரைக்குடி.
மாயூரம்	...	சீர்காழி, செம்பனார்கோயில், மாயூரம், குத்தாலம், குடவாசல், நன்னிலம்.
தஞ்சாவூர்	...	தஞ்சாவூர், ஒரத்தநாடு, கந்தர்வக்கோட்டை, பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி.
சிவகாசி	...	விருதுநகர், சாத்தூர், சிவகாசி, திருவில்லிபுத்தூர், இராசபாளையம், கோயில்பட்டி.

இரண்டாம் கட்டம் (18-2-67)

திருப்பத்தூர் ... நாட்ரம்பள்ளி, திருப்பத்தூர், வாணியம்பாடி, போளூர், செங்கம், தண்டராம்பட்டு.

சிதம்பரம் ... குறிஞ்சிப்பாடி, புவனகிரி, காட்டுமன்னார்கோயில், சிதம்பரம், விருத்தாசலம், மங்கலூர்.

கள்ளக்குறிச்சி ... உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், தலவாசல்.

கிருஷ்ணகிரி ... ஹோசூர், உத்தனப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவிரிப்பட்டினம், ஊத்தங்கரை, பாலக்கோடு.

சேலம் ... ஹரூர், தர்மபுரி, சேலம்-1, சேலம்-2, ஏற்காடு, வீரபாண்டி.

நீலகிரி ... கூடலூர், உதகமண்டலம், கூனூர், மேட்டுப்பாளையம், அவினாசி, தொண்டமுதூர்.

தாராபுரம் ... வால்பாறை, உடுமலைப்பேட்டை, தாராபுரம், வெள்ளக்கோயில், ஒட்டன்சத்திரம், பழனி.

திருச்சி ... தொட்டியம், முசிறி, ஸ்ரீரங்கம், திருச்சி-1, திருச்சி-2, திருவெறும்பூர்.

நாகப்பட்டினம் ... திருவாரூர், நாகப்பட்டினம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி கோட்டூர், மன்னார்குடி.

சிவகெங்கை ... திருப்பத்தூர், திருவாடானை, இளையாங்குடி, பரமக்குடி, சிவகங்கை, மானாமதுரை.

தென்காசி ... சங்கரன்கோயில், வாசுதேவநல்லூர், கடயநல்லூர், தென்காசி, ஆலங்குளம், அம்பாசமுத்திரம்.

திருச்செந்தூர் ... சேர்மாதேவி, திருச்செந்தூர், சாத்தான்குளம், நாங்குனேரி, ராதாபுரம், கன்னியாகுமரி.

நாகர்கோயில் ... நாகர்கோயில், கொளச்சல், பத்மநாமபுரம், திருவெட்டாறு, விலவன்கோடு, கிள்ளியூர்.

தேனியில்

பிரியாணி அண்டு சாப்பாட்டிற்கு சிறந்த இடம்

ஹோட்டல் உட்லண்ட்ஸ்

உணவு விடுதி

கம்பம் ரோடு தேனி மதுரை மாவட்டம்.

உரிமையாளர் எம். குருசாமி.

மூன்றும் கட்டம் (21-2-37)

திண்டிவனம்	...	திருவண்ணுமலை, மேல்மலையனூர், செஞ்சி, திண்டிவனம், வானூர், கண்டமங்கலம்.
கடலூர்	...	விழுப்புரம், நெல்லிக்குப்பம், கடலூர், பண்ருட்டி, திருக் கோவிலூர், முகையூர்.
மேட்டூர்	...	பெண்ணுகரம், மேட்டூர், தாராமங்கலம், ஓமலூர், இடைப் பாடி, சங்கரி.
திருச்செங்கோடு	...	பனைமரத்துப்பட்டி, திருச்செங்கோடு, கபிலர்மலை, நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம்.
கோயமுத்தூர்	...	சிங்காநல்லூர், பேரூர், கோவை மேற்கு, கோவை கிழக்கு, பல்லடம், திருப்பூர்.
பொள்ளாச்சி	...	கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, காங்கேயம், பொங்கலூர், மொடக்குறிச்சி, பெருந்துறை.
பெரியகுளம்	...	பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம், தேனி, ஆண்டிப் பட்டி, சேடப்பட்டி.
திண்டுக்கல்	...	திருமங்கலம், உசிலம்பட்டி, நிலக்கோட்டை, சோழவந் தான், திண்டுக்கல், ஆத்தூர்.
மதுரை	...	திருப்பரங்குன்றம், மதுரை மேற்கு, மதுரை சென்ட்ரல், மதுரை கிழக்கு, மேலூர் தெற்கு, மேலூர் வடக்கு.
பெரம்பலூர்	...	உப்பிலிபாளையம், பெரம்பலூர், ரகூர், ஆண்டிமடம், அரியலூர், லால்குடி.
இராமநாதபுரம்	...	இராமநாதபுரம், கடலாடி, முதுகுளத்தூர், கரியாப்பட்டி, அருப்புக்கோட்டை, விளாத்திகுளம்.
திருநெல்வேலி	...	ஓட்டப்பிடாரம், கங்கைகொண்டான், திருநெல்வேலி, மேலப்பாளையம், திருவைகுண்டம், தூத்துக்குடி.
கும்பகோணம்	...	ஜெயங்கொண்டம், திருவையாறு பாபநாசம், வலங்கை மான், கும்பகோணம், ஆடுதுறை.

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் !

தங்களது காகிதத் தேவை எதுவானுலும்
பூர்த்தி செய்ய அன்புடன் காத்திருக்கிறோம்.

ஜூப்ளி டிரேடர்ஸ்

17, ஆண்டர்சன் தெரு, சென்னை-1.

போன்:-22541

இவர்களுக்கு நீங்கள் ஓட்டளிக்கலாமா?

காங்கிரஸ் கட்சியும், குறிப்பாக காமராஜரும் ஏழைகளுக்காக காமராஜரும் ஏழைகளுக்காகப் பாடுபட்டு வருவதாகப் பறைசாற்றித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்!

ஜனநாயக சோஷலிசத்தை மலர வைத்து ஏழைகளுக்கு நல்வாழ்வு அளிப் தற்காகவே காமராஜர் உயிர் வாழ்ந்து வருவதாகவும்சொல்லிக் கொண்டு வருகிறார்கள்!

ஆனால் அவர்கள் தேர்தலில் நிறுத்தி வைப்பதோ ராஜாக்களையும், ஆலை அதிபர்களையும், வணிகச் சீமான்களையும், மிட்டாமிராசுகளையும்தான்!

சிவகங்கை ராஜாவையும், இராமநாதபுரம், ராஜாவையும் தேர்தலில் நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

செட்டிநாட்டு ராஜாவின் மைத்துனர் சி.வி.சி.டி. வெங்கடாசலம் செட்டியாரை காரைக்குடியிலே போட்டியிட வைத்திருக்கிறார்கள்!

டி. வி. எஸ். பஸ் அதிபரின் வாரிசு திருமதி சௌந்திரம் இராமச்சந்திரன் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடுகிறார்!

அருப்புக்கோட்டைத்தொகுதியிலே கடம்பவனம் என்ற ஜமீந்தார் போட்டியிடுகிறார்!

கோவையிலே பஸ் முதலாளி மகாலிங்கம் தேர்தலிலே நிற்கிறார்!

பெருந்துறையிலே .பழையகோட்டை பட்டக்காரர்!

சென்னைத் துறைமுகத் தொகுதியிலே வணிக வேந்தர் ஹாஜா ஷெரிப்!

காங்கிரஸ் வைரியாக இருந்து காலஞ்சென்ற பண்டித நேருவுக்கு தடை உத்திரவு போட்ட புதுக்கோட்டை ராஜாவின் தம்பி புதுக்கோட்டையிலே நிற்கிறார்!

புதுக் காங்கிரஸ் சீமான் டாக்டர் கிருஷ்ணசாமி திருத்தணியிலே நிற்கிறார்!

அத்திப் பழத்தைப் புட்டால் அத்தனையும் சொத்தை என்பதைப் போல காங்கிரஸ் பட்டியலைப் புரட்டினால் அத்தனைபேரும் பணக்காரர்கள்தான்! சோஷலிசத்தின் பலகைவர்கள்தான்!

ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி குடிக்கும் இந்த பண முதலைகளுக்கு காங்கிரஸ் டிக்கட்டைக் கொடுத்துவிட்டு சோஷலிசம் பேசுவது வெறும் பித்தலாட்டம் அல்லவா?

இப்படிப்பட்ட சமுகத் துரோகிகளுக்கு பொதுமக்கள் ஓட்டளிக்கலாமா? சிந்தித்துப் பாருங்கள்! **பின்பு உதய சூரியனுக்கே ஓட்டளிக்க முன் வாருங்கள்!**

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவிலேயே மிகப் பரம ஏழையாக இருக்கும் ஒருவர் சீமானைப் போல் வாழ்ந்து வருகிறார்!

அவருக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் வாடகையில் பங்களா! கார்!

ஏர்கண்டிஷன் ரூம்!

ரேடியோ டெலிவிஷன்!

விலை உயர்ந்த சோபாக்கள்!

ரத்தினக் கம்பளங்கள்!

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து பணியாற்ற எடுபிடி ஆட்கள்!

இத்தனை ஆடம்பரத்தோடு ஒரு ஏழை இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்!

அந்த மாடி வீட்டு ஏழை யார் என்று உங்களுக்குத் தெரிகிறதா? தெரியாவிட்டால் 65-ம் பக்கத்தைப் பார்க்கவும்.

தமிழகத்து சட்டசபைத் தொகுதிகளும் வாக்காளர்களின் எண்ணிக்கையும்

மொத்த சட்டமன்றத் தொகுதிகள் 234.

தமிழக வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 2,08,40,768.

சென்னை மாவட்டம்

(12 தொகுதிகள் 11,05,034 வாக்காளர்கள்)

தொகுதியின் பெயர்		வாக்காளர்கள் எண்ணிக்கை
1.	வண்ணாரப்பேட்டை	81,234
2.	துறைமுகம்:	80,770
3.	பேசின்பிரிட்ஜ்	1,00,668
4.	பூங்கா நகர்	74,911
5.	பெரம்பூர் (தனி)	1,01,844
6.	புரசைவாக்கம்	97,344
7.	எழும்பூர்	89,317
8.	ஆயிரம் விளக்கு	89,772
9.	திருவல்லிக்கேணி	86,625
10.	மயிலாப்பூர்	88,027
11.	தியாகராயநகர்	90,908
12.	சைதாப்பேட்டை	1,17,614

செங்கற்பட்டு மாவட்டம்

(15 தொகுதிகள் 13,87,589 வாக்காளர்கள்)

13.	கும்மிடிப்பூண்டி	94,510
14.	பொன்னேரி (தனி)	90,005
15.	திருவொற்றியூர்	1,12,583
16.	பரங்கிமலை	99,527
17.	திருப்போரூர்	87,997
18.	செங்கற்பட்டு	91,069
19.	மதுராந்தகம்	85,326
20.	அச்சரபாக்கம் : (தனி)	84,158
21.	உத்தரமேரூர்	93,228
22.	காஞ்சிபுரம்	98,067
23.	குன்றத்தூர் (தனி)	93,351
24.	திருப்பெரும்புதூர்	91,756
25.	கடம்பத்தூர்	83,439
26.	திருவள்ளூர் (தனி)	85,574
27.	திருத்தணி :	96,999

வடஆற்காடு மாவட்டம்

(22 தொகுதிகள். 18,80,479 வாக்காளர்கள்)

28.	அரக்கோணம்	90,915
29.	சோளிங்கர்	84,733
30.	இராணிப்பேட்டை:	92,314
31.	ஆற்காடு	84,923
32.	காட்பாடி	82,701
33.	குடியாத்தம்	85,458
34.	பேரணம்பட்டு (தனி)	81,424
35.	நாட்ரம்பள்ளி	81,135

36.	திருப்பத்தூர்	83,483
37.	வாணியம்பாடி	72,630
38.	ஆம்பூர் (தனி)	86,597
39.	கலசியம்பாடி	80,343
40.	வேலூர்	88,226
41.	ஆரணி	83,369
42.	செய்யாறு	86,809
43.	வந்தவாசி	94,968
44.	பெரணமல்லூர்	87,007
45.	போளூர்	83,730
46.	செங்கம் (தனி)	78,865
47.	தண்டராம்பட்டு	83,336
48.	கலசப்பாக்கம்	93,072
49.	திருவண்ணாமலை	94,483

தென்னாற்காடு மாவட்டம்

(21 தொகுதிகள். 18,30,785 வாக்காளர்கள்)

50.	மேல் மலையனூர்	92,700
51.	செஞ்சி	94,689
52.	திண்டிவனம்	89,965
53.	வானூர் (தனி)	88,959
54.	கண்டமங்கலம் (தனி)	85,950
55.	விழுப்புரம்	91,120
56.	நெல்லிக்குப்பம்	93,520
57.	கடலூர்	67,356
58.	பண்ணுருட்டி	98.778
59.	குறிஞ்சிப்பாடி (தனி)	78,332
60.	புவனகிரி	93.700
61.	காட்டுமன்னார்கோயில்	79.723
62.	சிதம்பரம்	90,892
63.	விருத்தாசலம்	96,128
64.	மங்களூர் (தனி)	90,471
65.	உளுந்தூர்பேட்டை	83,219
66.	திருக்கோயிலூர்	85,566
67.	முகையூர்	87,855
68.	ரிஷிவந்தியம் (தனி)	73,332
69.	சங்கராபுரம்	72,449
70.	கள்ளக்குறிச்சி	85,781

தர்மபுரி மாவட்டம்

(9 தொகுதிகள். 7,64,875 வாக்காளர்கள்)

71.	ஹோசூர்	77,986
72.	உதனப்பள்ளி	81.732
73.	கிருஷ்ணகிரி	79,862
74.	காவேரிப்பட்டினம்	85,634
75.	ஊத்தங்கரை	90,590
76.	அரூர் (தனி)	78,090
77.	தர்மபுரி	90,229
78.	பாலக்கோடு	89,578
79.	பெண்ணாகரம்	91174

சேலம் மாவட்டம்

(17 தொகுதிகள். 15,87,470 வாக்காளர்கள்)

80.	மேட்டூர்	89,669
81.	தாரமங்கலம்	88,421
82.	ஓமலூர் (தனி)	83,993
83.	சேலம்-1	98,107
84.	சேலம் 2	86,900
85.	ஏற்காடு (தனி)	75,553
86.	பனமரத்துப்பட்டி	85,852
87.	வீரபாண்டி	90,446
88.	எடப்பாடி	97,671
89.	சங்கரி (தனி)	95,195
90.	திருச்செங்கோடு	99,186
91.	கபிலர்மலை	1,04,565
92.	நாமக்கல்	92,423
93.	சேந்தமங்கலம் (தனி)	98,120
94.	இராசிபுரம்	97,329

95. ஆத்தூர் 1,14,666
96. தலைவாசல் 89,472

நீலகிரி மாவட்டம்

(3 தொகுதிகள். 2,19.859 வாக்காளர்கள்)

97. கூடலூர் (தனி) 69,652
98. உதகமண்டலம் 74,754
99. கூனூர் 75,453

கோவை மாவட்டம்

(25 தொகுதிகள். 22,87,381 வாக்காளர்கள்)

100. மேட்டுப்பாளையம் 1,03,201
101. அவிநாசி 87,935
102. தொண்டமுத்தூர் 10,1,723
103. சிங்காநல்லூர் 94,678
104. பேரூர் (தனி) 97,965
105. கோவை மேற்கு 73,334
106. கோவை கிழக்கு 91,194
107 கிணத்துக்கடவு 76,261
108. பொள்ளாச்சி 86,215
109. வால்பாறை (தனி) 92,369
110. உடுமலைப்பேட்டை 91,387
111. தாராபுரம் (தனி) 90,534
112. வெள்ளக்கோயில் 94,926
113. காங்கேயம் 94.023
114. பொங்கலூர் 91,390
115. பல்லடம் 96,691
116. திருப்பூர் 96,314
117. மொடக்குறிச்சி 1,00,674
118. பெருந்துறை 95,889
119. ஈரோடு 1,00,231
120. பவானி 90,629
121. அந்தியூர் 88,676
122. கோபிச்செட்டிபாளையம் 79,606
123. சத்தியமங்கலம் 77,058
124. பவானி சாகர் 74,318

மதுரை மாவட்டம்

(22 தொகுதிகள். 20,55,956 வாக்காளர்கள்)

125. ஒட்டன்சத்திரம் 98,927
126. பழனி (தனி) 96,740
127. பெரியகுளம் 88,447
128. போடிநாயக்கனூர் 83.333
129. கம்பம் 1,00,279
130. தேனி 92,051
131. ஆண்டிப்பட்டி 89,489
132. சேடப்பட்டி 87,440
133. திருமங்கலம் 90,154
134. உசிலம்பட்டி 88,780
135. நிலக்கோட்டை (தனி) 89,652
136. சோழவந்தான் 94,490
137. திருப்பரங்குன்றம் 1,07,286
138. மதுரை மேற்கு 1,11,018
139. மதுரை மத்தி 85,982
140. மதுரை கிழக்கு 82,572
141. மேலூர் தெற்கு (தனி) 98,204
142. மேலூர் வடக்கு 88,684
143. வட மதுரை 88,863
144. திண்டுக்கல் 94,677
145. ஆத்தூர் 99,963
146. வேடசந்தூர் 98,925

திருச்சி மாவட்டம்

(22 தொகுதிகள். 19,90,142 வாக்காளர்கள்)

147. அரவக்குறிச்சி 1,00.279
148. கரூர் 94,753

(63-ம் பக்கம் பார்க்க)

பாராளுமன்றத் தொகுதிகளும் அதற்குட்பட்ட சட்ட மன்றத் தொகுதிகளும்

வட சென்னை

(வாக்காளர்கள் 5,36,771)

1. வண்ணாரப்பேட்டை, 2. துறைமுகம், 3. பேசின பிரிட்ஜ், 4. பூங்காநகர், 5. பெரம்பூர், 6. புரசைவாக்கம்.

தென் சென்னை

(வாக்காளர்கள் 5,62,263)

7. எழும்பூர், 8. ஆயிரம் விளக்கு 9. திருவல்லிக்கேணி, 10. மைலாப்பூர், 11. தியாகராய நகர், 12. சைதாப்பேட்டை.

ஸ்ரீபெரும்புதூர் (தனி)

(வாக்காளர்கள் 5,81,732)

13. கும்மிடிப்பூண்டி, 14. பொன்னேரி, 15. திருவொற்றியூர், 16. பரங்கிமலை, 23. குன்னத்தூர், 24. ஸ்ரீபெரும்புதூர்.

செங்கற்பட்டு

(வாக்காளர்கள் 5,39,845)

17. திருப்போரூர், 18. செங்கற்பட்டு, 19. மதுராந்தகம், 20. அச்சரபாக்கம், 21. உத்திரமேரூர், 22. காஞ்சிபுரம்.

திருத்தணி

(வாக்காளர்கள் 5,33,974)

25. கடம்பத்தூர், 26. திருவள்ளூர், 27. திருத்தணி, 28. அரக்கோணம், 29. சோளிங்கர், 30. இராணிப்பேட்டை.

வேலூர் (தனி)

(வாக்காளர்கள் 5,04,749)

32. காட்பாடி, 33. குடியாத்தம், 34 பேரணம்பட்டு, 38. ஆம்பூர், 39. கணியம்பாடி, 40. வேலூர்.

திருப்பத்தூர்

(வாக்காளர்கள் 4,83,130)

35. நாட்ரம்பள்ளி, 36. திருப்பத்தூர், 37. வாணியம்பாடி, 45. போளூர், 46. செங்கம், 47. தண்டராம்பட்டு.

வந்தவாசி

(வாக்காளர்கள் 5,30,146)

31. ஆற்காடு, 41. ஆரணி, 42. செய்யார், 43. வந்தவாசி, 44. பெரணமல்லூர், 48. கலசபாக்கம்.

திண்டிவனம்

(வாக்காளர்கள் 5,47,046)

49. திருவண்ணமலை, 50. மேல்மலையனூர், 51. செஞ்சி, 52. திண்டிவனம், 53. வானூர், 54. கண்டமங்கலம்.

கடலூர்

(வாக்காளர்கள் 5,34,195)

55. விழுப்புரம், 56. நெல்லிக்குப்பம், 57. கடலூர், 58. பண்ருட்டி, 66. திருக்கோயிலூர், 67. முகையூர்.

சிதம்பரம் (தனி)

(வாக்கர்ளர்கள் 5,29,246)

59. குறிஞ்சிப்பாடி, 60. புவனகிரி, 61. காட்டுமன்னா கோயில், 62. சிதம்பரம், 63. விருத்தாசலம், 64. மங்கலூர்.

கள்ளக்குறிச்சி

(வாக்காளர்கள் 5,18,919)

65. உளுந்தூர்பேட்டை, 68. ரிஷிவந்தியம், 69. சங்கராபுரம், 70. கள்ளக்குறிச்சி, 95. ஆத்தூர், 96. தலைவாசல்.

கிருஷ்ணகிரி

(வாக்காளர்கள் 5,05,382)

71. ஹோசூர், 72 உதனப்பள்ளி, 73. கிருஷ்ணகிரி, 74. காவேரிப்பட்டி, 75. ஊத்தங்கரை, 78. பாலக்கோடு.

சேலம்

(வாக்காளர்கள் 5,19,325)

76. அரூர், 77. தர்மபுரி, 83. சேலம்-1, 84. சேலம்-2, 85. ஏற்காடு, 87. வீரபாண்டி.

மேட்டூர்

(வாக்காளர்கள் 5,46,023)

79. பெண்ணகரம், 80. மேட்டூர், 81. தாராமங்கலம், 82, ஓமலூர், எடப்பாடி, 89. சங்ககிரி.

திருச்செங்கோடு

(வாக்காளர்கள் 5,77,475)

86. பனைமரத்துப்பட்டி, 90. திருச்செங்கோடு, 91. கபிலர்மலை, 92. நாமக்கல், 93. சேந்தமங்கலம், 94. இராசிபுரம்

நீலகிரி

(வாக்காளர்கள் 5,12,538)

97. கூடலூர், 98. உதகமண்டலம், 99. கூனூர், 100. மேட்டுப்பாளையம், 101. அவினசி, 102. தொண்டமுத்தூர்.

கோயமுத்தூர்

(வாக்காளர்கள் 5,60,176)

103. சிங்காநல்லூர், 104. பேரூர், 105. கோவை மேற்கு, 106. கோவை கிழக்கு, 115. பல்லடம், 116. திருப்பூர்.

பொள்ளாச்சி

(வாக்காளர்கள் 5,54,452)

107. கிணத்துக்கடவு, 108. பொள்ளாச்சி, 113. காங்கேயம், 114. பொங்கலூர், 117. மொடக்குறிச்சி, 118. பெருந்துறை.

தாராபுரம் (தனி)

(வாக்காளர்கள் 5,64,983)

109. வால்பாறை 110. உடுமலைப் பேட்டை, 111. தாராபுரம், 112. வெள்ளக் கோயில், 125, ஒட்டன்சத்திரம், 126. பழனி

கோபிச்செட்டிப்பாளையம்

(வாக்காளர்கள் 5,10,518)

119. ஈரோடு, 120. பவானி, 121. அந்தியூர், 122. கோபிச்செட்டிப்பாளையம், 123. சத்தியமங்கலம், 124. பவானி சாகர்.

பெரியகுளம்

(வாக்காளர்கள் 5,41,039)

127. பெரியகுளம், 128. போடிநாயக்கனூர், 129. கம்பம், 130. தேனி, 131. ஆண்டிப் பட்டி, 132. சேடப் பட்டி.

திண்டுக்கல்

(வாக்காளர்கள் 5,57,716)

133. திருமங்கலம், 134. உசிலம்பட்டி, 135. நிலக்கோட்டை, 136. சோழவந்தான், 144. திண்டுக்கல், 145. ஆத்தூர்.

மதுரை

(வாக்காளர்கள் 5,73,746)

137. திருப்பரங்குன்றம், 138. மதுரை மேற்கு, 139. மதுரை மத்தி, 146. மதுரை கிழக்கு, 144. மேலூர் தெற்கு, 142. மேலூர் வடக்கு.

கரூர்

(வாக்காளர்கள் 5,58,721)

143. வட மதுரை, 146. வேடசந்தூர், 147 அரவக்குறிச்சி, 148. கரூர், 163. கிருஷ்ணராஜபுரம், 164. கடவூர்.

திருச்சி

(வாக்காளர்கள் 5,38,043)

149. தொட்டியம், 150. முசிறி, 158. ஸ்ரீரங்கம், 159. திருச்சி-1, 160. திருச்சி-2, 161. திருவெறும்பூர்.

பெரம்பலூர் (தனி)

(வாக்காளர்கள் 5,46,829)

151. உப்பிலிபாளையம், 152.பெரம்பலூர், 153. வரகூர், 154. ஆண்டிமடம், 156. அரியலூர், 151. லால்குடி.

புதுக்கோட்டை

(வாக்காளர்கள் 5,35,456)

162. குளித்தலை, 165. விராலிமலை, 166. திருமயம், 167. ஆலங்குடி, 168. புதுக்கோட்டை, 193. காரைக்குடி.

கும்பகோணம்

(வாக்காளர்கள் 5,38,461)

155. ஜெயங்கொண்டம், 169. திருவையாறு, 171. பாபனுசம், 172. வலங்கைமான், 173. கும்பகோணம், 174. ஆடுதுறை.

மாயவரம் (தனி

(வாக்காளர்கள் 4,69,451)

175. சீர்காழி, 176. செம்பனுர்கோயில், 177. மாயூரம், 178. குத்தாலம், 179. குடவாசல், 180. நன்னிலம்.

நாகப்பட்டினம்

(வாக்காளர்கள் 4,81,025)

181. திருவாரூர், 182. நாகப்பட்டினம், 183. வேதாரண்யம், 184. திருத்துறைப்பூண்டி, 185. கோட்டூர், 186. மன்னுர்குடி.

தஞ்சாவூர்

(வாக்காளர்கள் 5,24,746)

170. தஞ்சாவூர், 187. ஒரத்தநாடு, 188. கந்தர்வக் கோட்டை, 189 பட்டுக்கோட்டை,190.பேராவூரணி,191.அறந்தாங்கி

சிவகங்கை

(வாக்காளர்கள் 5,55,369)

132. திருப்பத்தூர், 194. திருவாடானை, 195. இளையாங்குடி, 199 பரமக்குடி, 200. சிவகங்கை, 201. மானுமதுரை.

இராமனுதபுரம்

(வாக்காளர்கள் 5,29,598)

196. இராமநாதபுரம், 197. கடலாடி, 198. முதுகுளத்தூர், 202. கரியாப்பட்டி, 203.அருப்புக்கோட்டை, 209.விளாத்திகுளம்.

சிவகாசி

(வாக்காளர்கள் 5,29,003)

204. விருதுநகர், 205. சாத்தூர், 202. சிவகாசி, 207. ஸ்ரீவில்லிபுத்தூர், 208. இராசபாளையம், 210. கோயில்பட்டி.

திருநெல்வேலி

(வாக்காளர்கள் 5,44,986)

211. ஓட்டப்பிடாரம், 219. கங்கைகொண்டான், 220. திருநெல்வேலி, 221. மேலப்பாளையம், 222. ஸ்ரீவைகுண்டம், 223. தூத்துக்குடி.

தென்காசி (தனி(

(வாக்காளர்கள் 5,37,447)

212. சங்கரன்கோயில், 213. வாசுதேவநல்லூர், 214. கடயநல்லூர், 215. தென்காசி, 216. ஆலங்குளம், 217. அம்பாசமுத்திரம்.

திருச்செந்தூர்

(வாக்காளர்கள் 5,35,236)

218. சேர்மாதேவி, 234. திருச்செந்தூர், 225. சாத்தான்குளம், 226. நாங்குனேரி, 227. ராதாபுரம், 328. கன்யாகுமரி.

நாகர்கோயில்

(வாக்காளர்கள் 4,70,787)

229. நாகர்கோயில், 230. கொளச்சல், 231. பத்மநாபபுரம், 232. திருவட்டார், 233. விளவங்கோடு, 234. கிள்ளியூர்.

★

சென்னை நகரத் தொகுதிகளும் அதில் அடங்கிய வட்டங்களும்

1. வண்ணாரபேட்டைத்தொகுதி

2. தண்டையார் பேட்டை
3. கிரேஸ் கார்டன்
4. சஞ்சீவிராயன் பேட்டை
5. மொட்டைத் தோட்டம்
6. நாராயணப்ப நாயக்கன் தோட்டம்
7. சிங்காரத் தோட்டம்
8. ராயபுரம்
9. மீனாட்சியம்மன் பேட்டை
10. பழையவண்ணாரபேட்டை

2 துறைமுகத் தொகுதி

கோட்டை சென்ட் ஜார்ஜ் பகுதி
11. ஏழு கிணறு வடக்கு
12. அம்மன்கோயில் வடக்கு
13. முத்தையால் பேட்டை
14. துறைமுகம்
15 மண்ணடி
16. அம்மன்கோயில் தெற்கு
17. ஏழு கிணறு தெற்கு
18. சௌகார் பேட்டை
19. கொத்தவால் சாவடி
20. கச்சாலேஸ்வரர்

3. பேசின் பிரிட்ஜ் தொகுதி

1. புது வண்ணாரப் பேட்டை
21. கொருக்குப்பேட்டை
22. குமாரசாமி நகர்
23. டாக்டர் விஜயராகவலு நகர்
24. பேசின் பிரிட்ஜ்
25. கொண்டித்தோப்பு
26. பெத்துநாயக்கன்பேட்டை
27. பெருமாள் கோயில் தோட்டம்

4. பூங்கா நகர் தொகுதி

28. ட்ரவிலியன் பேசின்
29. யானைக்கவுனி
30. எடப்பாளையம்
39. சூளை
40. ஆஸ்பத்திரி மைதானம்
41. கொசப்பேட்டை
49. பெருமாள் பேட்டை
63 பெரியமேடு
64. பூங்கா நகர்

5. பெரம்பூர் தொகுதி (தனி)

31. பெரம்பூர்
32. வியாசர்பாடி
33. புளியந்தோப்பு
34. வாடியாநகர்
35. திரு, வி, க, நகர்
36. பட்டாளம்
37. தட்டான்குளம்
38. பெசண்ட் நகர்

6. புரசைவாக்கம் தொகுதி

41. செம்பியம்
42. சிறுவாலூர்
43. அகரம்
44 நாகம்மை நகர்
45. அயனாவரம்
46, நம்மாள்வார் பேட்டை
47. ஓட்டேரி
50. புரசைவாக்கம்

7. எழும்பூர் தொகுதி

51. ஷெனாய் நகர்
52. கீழ்பாக்கம்
53. சேத்துப்பட்டு
24. ஜங்கம்பாக்கம்
61. கெங்காதீஸ்வரர் கோயில்
62 டாக்டர் அம்பேத்கார்நகர்
67. எழும்பூர்
68. புதுப்பேட்டை
69 கோமளீஸ்வரன்பேட்டை

8. ஆயிரம் விளக்குத் தொகுதி

56. ஆயிரம் விளக்கு மேற்கு
57. ஆயிரம் விளக்கு கிழக்கு
58. புதுப்பாக்கம்
59. அமீர்மகால்
60. ராயப்பேட்டை
77. மீர்சாகிப் பேட்டை
78. ஆஜாத் நகர்
79 துர்க்காபுரம்
80. சிருஷ்ணாம்பேட்டை

9. திருவல்லிக்கேணி தொகுதி

65. ஆதிகேசவபுரம்
66. சிந்தாதிரிப்பேட்டை

70. நரசிங்கபுரம்
71. நேரு நகர்
72. திருவட்டீஸ்வரன் பேட்டை
73. சேப்பாக்கம்
74. மெரினு
75. திருவல்லிக்கேணி
76. ஜாம்பசார்

10. மைலாப்பூர் தொகுதி

82: விவேகாநந்தபுரம்
83. மாதவப்பெருமாள் புரம்
84. காரணேஸ்வர புரம்
85. சாந்தோம்
86. மைலாப்பூர்
87. பீமண்ண பேட்டை
69. ராஜா அண்ணுமலே புரம்
90. அடையாறு

11. தியாகராய நகர் தொகுதி

55. சேவா கிராம்
81. தேனும்பேட்டை
88. ஆள்வார் பேட்டை
93. தியாகராயர்நகர்
94. சத்தியமூர்த்தி நகர
95. ராஜாஜி நகர்
96. பெரிய பேட்டை

12: சைதாப்பேட்டை தொகுதி

91. அமைந்தகரை
92. வட பழனி
96. காமராஜர் நகர்
97. சைதாப்பேட்டை வடக்கு
99. கிண்டி
100. சைதாப்பேட்டை தெற்கு

★

ஓட்டுப்போடும் முன் ஒரு சொல் கேளீர்!

இந்திய மக்களில் 4 கோடியே 30 இலட்சம் பேருடைய ஒருநாள் வருமானம் எவ்வளவுதெரியுமா?

முப்பதே காசுதான்!

∴∴∴

4 கோடியே 60 இலட்சம் பேருடைய ஒருநாள் வருமானம் எவ்வளவு தெரியுமா ?

ஐம்பத்தொன்றே காசுதான்!

∴∴∴

4½ கோடி மக்களின் ஒரு நாள் வருமானம் என்ன தெரியுமா ?

ஐம்பத்தொன்பதே காசுதான்!

∴∴∴

ஒரு ரூபாய்க்கும் குறைவாக

வருமானம் பெறுவோர்

பதினேழு கோடி மக்கள்!

∴∴∴

வாக்காளர்களே !

இந்தப் புள்ளி விபரத்தை நாம் கூறவில்லை. காங்கிரஸ் ஆட்சியிலே வெளியிடப்பட்டுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகலிலுள்ள புள்ளி விபரங்கள் இதைக் கூறுகின்றன !

இப்படிப்பட்ட நரக வாழ்வைத் தந்த கட்சிக்கா மீண்டும் உங்களது ஓட்டைப் போட இருக்கிறீர்கள்!

ஒரு முறை சிந்தியுங்கள்!

1962 தேர்தல் புள்ளி விபரங்கள்!

1957 தேர்தல்

இந்தியத் துணைக் கண்டத்தில் முதன் முதலாக தேர்தல் நடைபெற்றது 1952-ல்தான்!

1952-ல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் போட்டியிடவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை ஆதரிப்பவர்களையும், திராவிட நாடு கோரிக்கையைப் பற்றி வாதாடுவேன் என்று உறுதிப்பத்திரத்தில் கையெழுத்துப் போடுபவர்களையும் ஆதரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது!

அதன்படி சில நண்பர்கள் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டார்கள்!

எஸ்.எஸ். இராமசாமி தலைமையில் இயங்கி வந்த உழைப்பாளர் கட்சி திராவிட நாடு கோரிக்கையை எழுப்புவதாக கையொப்பமிட்டது! இதனால் திராவிட முன்னேற்றக் கழகம் உழைப்பாளர்கட்சியை முழுமூச்சுடன் ஆதரிக்கத் தொடங்கியது!

தி. மு. கழகத்தின் உதவியோடு உழைப்பாளர் கட்சி சிறப்பான வெற்றியைப் பெற்றது! அப்போது காங்கிரஸ் கட்சி மைனரிட்டி கட்சியாக வந்தது!

தி. மு. கழகத்தின் ஆதரவோடு வெற்றி பெற்ற மாணிக்கவேலரின் காமன்வீல் கட்சியை, மாணிக்கவேலருக்கு மந்திரி பதவி அளிப்பதன் மூலம் சேர்த்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி மந்திரி சபையை அமைத்தது!

அதற்கடுத்தபடியாக காமராஜர் முதல் மந்திரியாக வந்தவுடன் உழைப்பாளர் கட்சித் தலைவர் திரு. எஸ். எஸ். இராமசாமி (படையாச்சி) க்கு மந்திரி பதவியை அளித்து உழைப்பாளர் கட்சியையும் காங்கிரஸ் கட்சியோடு இணைத்துக் கொண்டு விட்டார்கள்!

தி. மு. கழகததின் ஆதரவில் வெற்றி பெற்ற மாணிக்கவேலர் கட்சியும், இரமசாமி (படையாச்சி) கட்சியும் மக்களுக்கும், கழகத்திற்கும் துரோகம் செய்து காங்கிரஸ் கட்சியோடு இணைந்ததைக் கண்டு தி. மு. கழகம் வேதனைப்பட்டது! நாட்டு மக்களும் கொதித்தெழுந்தார்கள்!

இனிமேல் நாமே போட்டியிட்டால் தான் நாட்டிற்கு நன்மை செய்யமுடியும் என்று கழகத் தலைவர்கள் எண்ணினார்கள்!

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் பொதுமக்களின் விருப்பத்தை அறிந்து தி. மு. கழகம் 1957-ல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் போட்டியிட முன் வந்தது!

1957-ல் கழகம்முதன்முறையாகப்போட்டியிட்டு 15 இடங்களில் வெற்றி பெற்றது! ஏறத்தாழ 17 இலட்சம் வாக்குகளையும்

1957 தேர்தலில் காங்கிரஸ் கட்சி 151 இடங்களையும், கம்யூனிஸ்டு கட்சி நான்கு இடங்களையும், பிரஜா சோஷலிஸ்டு இரண்டு இடங்களையும், பார்வர்டு பிளாக் மூன்று இடங்களையும், சோஷலிஸ்டு இரண்டு இடங்களையும், இந்திய ஜனநாயக காங்கிரஸ் 16 இடங்களையும், சுயேச்சைகள் இருபத்திரெண்டு இடங்களையும் பெற்றனர்!

1962 தேர்தல்

1962 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பணபலத்தோடும், அதிகாரபலத்தோடும் தேர்தலில் சொல்லமுடியாத தொல்லைகளைத் தந்தபோதிலும் தி. மு. கழகம் சிறப்பான வெற்றியைப் பெற்றது!

1962 பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் 142 இடங்களில் போட்டியிட்டது! ஐம்பது இடங்களில் வெற்றி பெற்றது! 34,14,657 வாக்குகளைப் பெற்றது!

காங்கிரஸ் கட்சி 206 இடங்களிலும் போட்டியிட்டு 139 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது !

சுதந்திரா கட்சி 94 இடங்களில் போட்டியிட்டு ஆறு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது !

கம்யூனிஸ்டுகட்சி 68 இடங்களில் போட்டியிட்டு இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது !

பிரஜா சோஷலிஸ்டு கட்சி 21 இடங்களில் போட்டியிட்டு ஒருவர் கூட வெற்றிபெறவில்லை!

முஸ்லீம் லீக் ஆறு இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றிபெறவில்லை!

பார்வர்டு பிளாக் கட்சி ஆறு இடங்களில் போட்டியிட்டு மூன்று இடங்களில் வெற்றி பெற்றது !

சோஷலிஸ்டு கட்சி ஏழு இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் வெற்றி பெற்றது!

சுயேச்சைகள் 134 இடங்களில் போட்டியிட்டு ஐந்து இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ருர்கள் !

தி. மு. கழகத்தின் சக்தியை அழிப்பதற்காக காமராஜரின் முயற்சியால் துவக்கப்பட்ட சம்பத்து கட்சி எட்டு இடங்களில் போட்டியிட்டது ! ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை ! ஏழு இடங்களில் ஜாமீனை பறி கொடுத்து என்றென்றும் தலைதூக்க முடியாமல் வீழ்ச்சியடைந்தது !

1962-ல் தி. மு. க. 50. காங்கிரஸ் கட்சி 139. சுதந்திரா 6, பார்வர்டு பிளாக் 3, கம்யூனிஸ்டு 2, சோஷலிஸ்டு 1, சுயேச்சைகள் 5 வெற்றி பெற்ற இடங்களாகும் !

1962-ல் மிகச் சிறப்பான வெற்றி பெற்ற தி. மு. கழகம் 1997 பொதுத் தேர்தலில் மிகப் பெரும் வெற்றியைப் பெற்று ஆட்சியை அமைக்கும் என்றும் நம்புகிரேம் !

வாழ முடியாமல் தவிக்கும் தமிழகத்துப் பொது மக்கள் தி. மு. கழகத்தின் கையில் ஆட்சியை ஒப்படைப்பார்கள் என்றும் நம்புகிரேம் !

எல்லோருக்கும்

எமது அன்பு வாழ்த்துக்கள் !

கோல்டு கவரிங் ஆபரணங்கள்

வெள்ளி பில்கிரி ஆபரணங்கள்

இமிடேஷன் நகைகள்

முதலியன கிடைக்கும்.

களஞ்சியம் பிரதர்ஸ்

14, சைஞ பஜார்

சென்னை-1.

தொலை பேசி எண்: 34615

பூமகளின் புதிய வெளியீடுகள் !

ஏழை மக்களின் துணைவன் !
அவர்கள் இதயத்திலே குடியிருப்பவன் !
எல்லோராலும் போற்றப்படும்
மக்கள் திலகம் !

கலைச்செல்வன் எழுதிய

ஏழைபங்காளன் எம். ஜி. ஆர்.

விலை 50 காசு.

நட்சத்திரங்களிடையே ஒரு தனிப் பிறவி!
நாட்டு மக்களிடையே ஒரு தனிப் பிறவி !
அன்புள்ளங்களிலே வாழும்
அபூர்வத் தனிப் பிறவி !

என், வி. கலைமணி
எழுதிய

தனிப் பிறவி எம். ஜி. ஆர்.

விலை 50 காசு.

கிடைக்குமிடம்:

பூமகள் புத்தகப் பண்ணை

தபால் பெட்டி எண் 1699

3-71, பிராட்வே, சென்னை-1.

1962-ல்

வெற்றி பெற்ற கழக வீரர்கள்!

1962-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கழகம் ஐம்பது இடங்களில் வெற்றி பெற்றது! வெற்றி பெற்ற கழக வீரர்களின் பெயர்கள், தொகுதிகள், அவர்கள் பெற்ற மொத்த ஓட்டுகளைத் தொகுத்துத் தந்திருக்கிறோம்.

சென்னை மாவட்டம் (4 பேர்)

1.	இரா. நெடுஞ்செழியன்	...	திருவல்லிக்கேணி	33,273
2.	கே. ஏ. மதியழகன்	...	ஆயிரம் விளக்கு	27,984
3.	இராம. அரங்கண்ணல்	...	மைலாப்பூர்	25,825
4.	காஞ்சி மணிமொழியார்	...	தியாகராயநகர்	35,402

செங்கற்பட்டு மாவட்டம் (2 பேர்)

5.	முனு ஆதி	...	சைாப்பேட்டை	37,123
6.	செ. கோ. விஸ்வனாதன்	...	செங்கற்பட்டு	27,993

வட ஆற்காடு மாவட்டம் (12 பேர்)

7.	எஸ். ஜே. இரமசாமி	...	அரக்கோணம்	26,586
8.	ஆர். சம்பங்கி	...	விரிஞ்சாபுரம்	23,459
9.	எஸ். முத்துலிங்கம்	...	வந்தவாசி	34,922
10.	புலவர் கோவிந்தன்	...	செய்யாறு	23,250
11.	முனிரெத்தினம்	...	ஆற்காடு	28,485
12.	அப்துல் கலீல்	...	இராணிப்பேட்டை	24,082
13.	கேசவன்	...	போளூர்	29,282
14.	வி. பி. முருகையன்	...	துரிஞ்சாபுரம்	21,163
15.	திருப்பதி	...	திருப்பத்தூர்	32,400
16.	எம். பி. வடிவேலு	...	வாணியம்பாடி	27,275
17.	சின்னராஜு	...	செங்கம்	34,374

தென் ஆற்காடு மாவட்டம் [7 பேர்]

18.	ஏ. தங்கவேலு	...	திண்டிவனம்	27,687
19.	ஏ. ஜி. பாலகிருஷ்ணன்	...	வானூர்	22,463
20.	எம். சண்முகம்	...	விழுப்புரம்	39,923
21.	வி. கிருஷ்ணமூர்த்தி	...	நெல்லிக்குப்பம்	37,429

22.	இராஜாங்கம்	...	குறிஞ்சிப்பாடி	32,046
23.	எம். கிருஷ்ணமூர்த்தி	...	காட்டுமன்னார்கோயில்	27,706
24.	இரா. சின்னசாமி	...	கள்ளக்குறிச்சி	25,084

சேலம் மாவட்டம்]9 பேர்]

25.	ஆறுமுகம்	...	வீரபாண்டி	30,840
27.	ஸ்ரீராமுலு	...	கிருஷ்ணகிரி	38,833
27.	சி. மாணிக்கம்	...	அரூர்	26,879
28.	ஆர். கமலநாதன்	...	ஊத்தங்கரை	37,259
29.	எம். வி. கரிவேங்கடம்	...	பெண்ணாகரம்	26,911
30.	செங்கோட்டுவேல்	...	இராசிபுரம்	26,846
31.	பெரியண்ணன்	...	சேந்தமங்கலம்	27,728
32.	வேலப்பன்	...	கபிலமலை	36,960
33.	நல்லமுத்து	...	மல்லசமுத்திரம்	18,718

மதுரை மாவட்டம் [3 பேர்]

34.	எம். இராஜாங்கம்	⋮	உத்தமபாளையம்	28,907
35.	எஸ். எஸ். இராசேந்திரன்	...	தேனி	37,404
36.	வி. எஸ். எஸ். மணி	...	ஆத்தூர்	34,632

திருச்சி மாவட்டம் [9 பேர்]

37.	எம். எஸ். மணி	...	திருச்சி	31,221
38.	டி. பி. அழகமுத்து	...	பெரம்பலூர்	38,696
39.	ஆர். நாராயணன்	...	அரியலூர்	41,721
40.	அன்பில் தர்மலிங்கம்	...	லால்குடி	38,951
41.	இராமசாமி	...	த. பழூர்	40.593
42.	ஜெகதாம்பாள்	...	ஜெயங்கொண்டம்	32,005
43.	மணி	...	வெண்கலம்	24,091
44.	ஏ. தியாகராஜன்	...	புதுக்கோட்டை	37,563
45.	முருகையன்	...	ஆலங்குடி	31,438

தஞ்சை மாவட்டம் [4 பேர்]

46.	கலைஞர் கருணாநிதி	...	தஞ்சை	32,145
47.	அருணாசலம்	...	பட்டுக்கோட்டை	35,151
48.	துரையரசன்	...	அறந்தாங்கி	33,781
49.	கோ. சி. மணி	...	ஆடுதுறை	39,750

இராமநாதபுரம் மாவட்டம் [1 பேர்]

50.	எஸ். மாதவன்	...	திருக்கோஷ்டியூர்	24,383

பாராளுமன்ற வெற்றி வீரர்கள் (8 பேர்)

1.	நாஞ்சில் கி. மனோகரன்	...	தென் சென்னை	1,51,917
2.	பி. சிவசங்கரன்	...	ஸ்ரீபெரும்புதூர்	1,57,733
3.	இரா. தர்மலிங்கம்	...	திருவண்ணாமலை	1,41,254
4.	அரூர் முத்து	...	திருப்பத்தூர்	1,51,938
5.	இராமபத்திரன்	...	கடலூர்	1,60,810
6.	கே. ராஜாராம்	...	கிருஷ்ணகிரி	1,27,508
7.	இரா. செழியன்	...	பெரம்பலூர்	1,88,926

திருவண்ணாமலை சட்டசபைத் தொகுதியில் ப. உ. சண்முகமும், திருச்செங்கோடு பாராளுமன்றத் தொகுதியில் செ. கந்தப்பனும் இடைத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் !

ஓட்டுப்போடும்முன் ஒருமுறை சிந்திப்பீர்!

தேனும் பாலும் தெருவெல்லாம் ஓடுமென்று காங்கிரஸ்காரர்கள் முழக்கம் செய்தார்கள்.

அவர்கள் ஆட்சியிலே !

எருமைப் பால் படி விலை நாலு ரூபாய் !

பசும் பால் படி விலை 3 ரூபாய் 20 காசு !

இதற்கு யார் காரணம் ?

காங்கிரஸ் ஆட்சியல்லவா ?

ஒருமுறை சிந்திப்பீர் ! பிறகு ஓட்டளிப்பீர் !

ஈ. ஆர். கிருஷ்ணன் சேலம்-2.



ஜெயராமன், சேலம்-1.



இளம்வழுதி, கடலூர்.

எம். எம். பீர்முகம்மது
(மேலப்பாளையம்)

(ஆதித்தனார்)
(ஸ்ரீவைகுண்டம்)

எம். ஏ. முகம்மது சாலிக்
(பாபநாசம்)



தாம்பரம் விற்பனையாளர்

முரசொலி
மாலைமணி
சமநீதி

கிடைக்குமிடம்:

பி. இளங்கோ

சொர்ணம் புக் ஸ்டால்

தாம்பரம்.

(51-ம் பக்கம் தொடர்ச்சி)

149.	தொட்டியம்	96,170
150.	முசிறி	85,062
151.	உப்பிலியாபுரம்	91,996
152.	பெரம்பலூர் (தனி)	88,723
153.	வரகூர்	92,757
154.	ஆண்டிமடம்	89,600
155.	ஜெயங்கொண்டம் (தனி)	84,800
156.	அரியலூர்	92,293
157.	லால்குடி	91,460
158.	ஸ்ரீரங்கம் (தனி)	92,266
159.	திருச்சி-1.	90,051
160.	திருச்சி-2	81,949
161.	திருவெறும்பூர்	92,545
162.	குளித்தலை	97,247
163.	கிருஷ்ணராசபுரம் (தனி)	88,624
164.	கடவூர்	87,277
165.	விராலிமலை	91,528
166.	திருமயம்	89,498
167.	ஆலங்குடி	80,808
168.	புதுக்கோட்டை	90,456

தஞ்சை மாவட்டம்

(23 தொகுதிகள். 19,28,883 வாக்காளர்கள்)

169.	திருவையாறு	92,276
170.	தஞ்சை	79,943
171.	பாபநாசம்	91,505
172.	வலங்கைமான் (தனி)	83,501
173.	கும்பகோணம்	92,881
174.	ஆடுதுறை	93,498
175.	சீர்காழி (தனி)	79,674
176.	செம்பனார்கோயில்	77,452
177.	மாயூரம்	84,875
178.	குத்தாலம்	77,128
179.	குடவாசல்	76,983
180.	நன்னிலம் (தனி)	73,639
181.	திருவாரூர் (தனி)	80,295
182	நாகப்பட்டினம்	81,422
183.	வேதாரண்யம்	82,720
184.	திருத்துரைப்பூண்டி	75,490
165.	கோட்டூர் (தனி)	78.747
186.	மன்னார்குடி	82,351
187.	ஒரத்தநாடு	88757
188.	கந்தர்வக்கோட்டை	83,690
189.	பட்டுக்கோட்டை	79,659
190.	பேராவூரணி	93,210
191.	அறந்தாங்கி	99,487

ராமநாதபுரம் மாவட்டம்

(17 தொகுதிகள். 15,34,289 வாக்காளர்கள்)

192.	திருப்பத்தூர்	87,114
193.	காரைக்குடி	89,919
194.	திருவாடானை	96,687
195.	இளையான்குடி	91,158
196.	இராமநாதபுரம்	84,807
197.	கடலாடி (தனி)	90,382
198.	முதுகளத்தூர்	97,163
199.	பரமக்குடி (தனி)	94,203
200.	சிவகங்கை	91,418
201.	மானாமதுரை	94,789
202.	கரியாப்பட்டி	90,626
203.	அருப்புக்கோட்டை	81,338
204.	விருதுநகர்	83,138
205.	சாத்தூர்	87,629
206.	சிவகாசி	90,905

207. ஸ்ரீவில்லிபுத்தூர் 93,029
208. இராசபாளையம் 89,984

திருநெல்வேலி மாவட்டம்

(19 தொகுதிகள். 17,11,007 வாக்காளர்கள்)

209. விளாத்திகுளம் 85,282
210. கோயில்பட்டி 84,318
211. ஓட்டப்பிடாரம் (தனி) 85,259
212. சங்கரன்கோயில் (தனி) 89,891
213. வாசுதேவநல்லூர் 93,015
214. கடையநல்லூர் 91,249
215. தென்காசி 86,103
216. ஆலங்குளம் 88,139
217. அம்பாசமுத்திரம் 89,050
218. சேர்மாதேவி 86,185
219. கங்கைகொண்டான் (தனி) 92,523
220. திருநெல்வேலி 89,761
221. மேலப்பாளையம் 91,712
222. ஸ்ரீவைகுண்டம் 93,815
223. தூத்துக்குடி 91,916
224. திருச்செந்தூர் 91,755
225. சாத்தான்குளம் 89,747
226. நாங்குநேரி 92,735
227. இராதாபுரம் 88,552

குமரி மாவட்டம்

(7 தொகுதிகள். 5,57,049 வாக்காளர்கள்)

228. கன்னியாகுமரி 86,262
229. நாகர்கோயில் 86,490
230. கொளச்சல் 88,084
231. பத்மநாபபுரம் 74,205
232. திருவட்டார் 74,601
233. விளவங்கோடு 73,723
234. கிள்ளியூர் 73,684

'ரேடியோ டெலிவிஷன்'

"ரேடியோ டெலிவிஷன்"

ரேடியோ—ட்ரான்ஸிஸ்டர், ஆம்பிளிபயர் டெலிவிஷன் எலக்ட்ரிசிட்டி—டேப் ரிக்கார்டர் முதலிய எலக்ட்ரானிக் தொழில் நுட்பங்களைத் தாங்கி, தமிழ் நாட்டில் முதன் முதலாக தமிழிலேயே மூன்றுவது ஆண்டாக வெளிவரும் மாத இதழ்.

தனிப் பிரதி விலை ரூ. 1-25. ஆண்டு சந்தா ரூ. 15-00

ரேடியோ—ட்ரான்ஸிஸ்டர் தொழில் முறையை 40 நாட்களில் குறைந்த கட்டணத்தில் நேரிலோ, தபால் மூலமோ, சிறந்த முறையில் கற்றுக்கொள்ள 10 காசுகளுடன் விசாரிக்கவும்.

வ, அருணாசலம்

ஓம்ஸ் ரேடியோ ஹோம்

35, வாலாஜா ரோடு, சென்னை-2.

1962

தமிழ் நாடு சட்டசபை பொதுத் தேர்தல்!

மொத்த இடங்கள் 206. மொத்த வாக்குகள் 1,85,87,045

பதிவான வாக்குகள் 1,30,85,924.

	கட்சிகள்	போட்டி யிட்ட இடங்கள்	வெற்றி பெற்ற இடங்கள்	பதிவான மொத்த ஓட்டுகள்	பதிவான ஓட்டுகள் சத விகிதம்
1.	தி. மு. க.	142	50	34,14,657	27·13
2.	காங்கிரஸ்	206	139	58,15,978	46·22
3.	சுதந்திரா	94	6	9,93,768	7·90
4.	கம்யூனிஸ்டு	68	2	9,65,344	7·67
5.	முஸ்லிம் லீக்	6	—	89,918	0·71
6.	பிரஜா சோஷலிஸ்டு	21	—	1,59,312	1·26
7.	தொழிலாளர் சோஷலிஸ்டு	7	—	43,186	0·34
8.	பார்வர்ட் பிளாக்	6	3	1,73,261	1·37
9.	ஜன சங்கம்	4	—	10,743	0·08
10.	குடியரசு கட்சி	4	—	57,457	0·45
11.	சோஷலிஸ்டு கட்சி	7	1	40,194	0·32
12.	தமிழ் தேசிய கட்சி(சம்பத்)	8	—	24,237	0·19
13.	சுயேச்சைகள்	134	5	7,94,491	6·31
	செல்லாத ஓட்டுகள்		—	5,03,732	

மாடி வீட்டு ஏழை !

அவர்தான் இவர்!

இந்த நாட்டில் பணக்காரர்கள் தான் கும்மாளம் அடிக்கிறார்கள் ! உல்லாசத்தையும், சல்லாபத்தையும் அனுபவித்து வருகிறார்கள் !

ஏழைகளால் வாழவே முடியவில்லை ! இதைப் போக்க வேண்டும் என்று கூறி வரும் சோஷலிசப் பிதா காமராஜர்தான் டெல்லியில் இத்தனை சுக போகங்களையும் அனுபவித்து வருகிறார் !

1

சொக்கநாதம் பிள்ளையின் ஆலைச் சங்கு அலறிக் கொண்டிருந்தது !

தொழிலாளிகளோ தங்கள் உரிமைக் குரலை எழுப்பி போர் முழக்கம் செய்துக் கொண்டிருந்தார்கள் !

ஏய்த்துப் பிழைக்காதே ! ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே !

கருணைக் கடல் காந்தி பேரைச் சொல்லாதே ! எங்களை கண்ணீர் சிந்த வைக்காதே!

சோஷலிச வீரனே ! போனஸ் கொடு, சம்பளத்தை உயர்த்து !

பி.எஸ். இளங்கோ

வேலை நீக்கம் செய்த எங்கள் தலைவன் வீரமணியை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்!

சோஷலிசம் பேசும் சொக்கநாதம் பிள்ளையே ! சோறு போடு, சோறு போடு !

ஆலைத் தொழிலாளிகள் இந்த வீர முழக்கத்தை முழங்கிக் கொண்டு அந்த மில் வாசலிலே போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள் !

சொக்கநாதம் பிள்ளை பதை பதைத்து வெளியே வந்தார் ,

''என்ன இது ?''

''போராட்டம் !''

''எதற்காகப் போராட்டம் செய்கிறீர்கள்?''

சோற்றுக்காகப் போராட்டம் செய்கிறோம்! உரிமைக்காகப் போராட்டம் செய்கிறோம் ! எங்கள் தலைவன் வீரமணியை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டும என்பதற்காக போராட்டம் செய்கிறோம் !'' தொழிலாளிகள் உறுதியோடு கூறினர்கள் !

''சோற்றுக்காக ஒரு போராட்டமா ?''

''ஆமாம் ! சோஷலிசப் பிதாவின் சிஷ்யப் பிள்ளையாயிற்றே நீங்கள் ! சோற்றுக்குப் போராட்டம்தானே நடத்த வேண்டி இருக்கிறது'' தொழிலாளிகள் இப்படி அஞ்சா நெஞ்சத்துடன் கூறினர்கள் !

"அதிகப் பிரசங்கி! போலீசைக் கூப்பிடுவேன்!" சொக்கநாதம் பிள்ளை அணிந்திருந்த கதர்க் குல்லாயைச் சரி செய்துக்கொண்டே கூறினார்!

"நீங்கள் ஆணையிட்டால் போலீஸ் வரலாம்! எங்கள் மண்டையைப் பிளக்கலாம்! ஆனால் நாங்கள் ஆணையிட்டால் இந்த மில் ஓடாது!" ஒரு தொழிலாளி இப்படி வீர முழக்கமிட்டான்!

"ஆலையை இழுத்து மூடினால் சோற்றுக்கு நாய்போல அலைவீர்கள்!" சொக்கநாதம் பிள்ளை உரத்தக் குரலில் கூறினார்!

"நாய்போல அலைவது யார் என்று பார்த்து விடுவோம்" தொழிலாளிகளும் உரத்தக் குரலில் முழக்கமிட்டார்கள்!

அதற்குள் போலீஸ் வந்தது! தொழிலாளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர்!

சோறு கேட்டால் துப்பாக்கிச் சூடா? உரிமை வேண்டும் என்றால் தடியடியா? வரட்டும் அறுபத்தேழு, வரட்டும் அறுபத்தேழு" என்ற முழக்கத்துடன் மில் தொழிலாளிகள் கலைந்து சென்றனர்!

சொக்கநாதம் பிள்ளையின் நெஞ்சம் படபடத்தது! வீட்டிற்கு வந்து சோபாவில் கவலையோடு சாய்ந்தார்!

2

உலகம் இருண்டு கிடந்தது! வான வீட்டிலே ஆங்காங்கே சிதறிக் கிடந்த நட்சத்திரக் கூட்டங்கள் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி ஒளியைச் சிந்திக் கொண்டிருந்தன!

வீரமணி நீல நிறக் கடலையும், அந்தக் கடலிலே பாய்ந்து வரும் அலைகளையும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்!

கரை மோதும் அலையைப் போல அவன் நெஞ்சப் பாறையிலும் அலை மோதிக் கொண்டிருந்தது!

தொழிலாளிகள் நடத்திய போரட்டத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான்!

**வாணி தமிழ்
இங்கிலீஷ்
சுபோதினி**

தமிழ் மூலம் சுலபமாக இங்கிலீஷ் படிக்க, பேச எழுத கற்க முடியும்.

விலை ரூ. 5-00. வி. பி. ரூ. 1-25.

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, ஸ்னே போன்ற 206 புது தொழில்கள் அடங்கியது.
ரூ. 4-00. வி. பி. ரூ. 0-85.

"மெஸ்மரிச" புத்தகம்
மனோவசிய சாஸ்திரம் படங்களுடன்.
ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.
ரூ. 2-00. வி. பி. ரூ. 0-85.

மலையாள மாந்திரீகம்
பூஜா சக்கர படங்களுடன்
ரூ. 1-25. வி. பி. ரூ. 0-75.

வாணி புக் டிபோ
3, மலைய பெருமாள் தெரு,
ரூம் நெ. 5. சென்னை-1.

தபால் பெட்டி நெ. 300 போன்: 37533

ஸ்ரீ அம்பிகா மெடிகல் ஹால்
(சித்த ஆயுர்வேதிக், ரிஜிஸ்டர்)
19, குமரப்ப முதலி தெரு, சென்னை-1.
(முருகன் டாக்கீஸ் சமீபம்)

ரத்தின புஷ்டி லேகியம்

தளர்ந்து, துவண்டு, உணர்வு இழந்து போன நாடி நரம்புகள் முறுக்கேறி பலப்படும். குத்தல், குடைச்சல், மூட்டு நோய், இடுப்பு நோய், மார்பு நோய், பலம், புஷ்டி, வீரியம், ஞாபக சக்தி, ஆரோக்கியம் ஆகிய பல நன்மைகளைப் பெறலாம்.

40 நாள் காலை மாலை சாப்பிடும் லேகியம்.
டின் ஒன்றுக்கு 10 ரூபாய்.
பாக்கிங், தபால் செலவு தனி.

தேவைக்கு நேரிலோ, அல்லது வி. பி. பி. மூலமோ பெறலாம்.

நாள்பட்ட வியாதிகள் எதுவாயினும் நேரிலோ. தபால் மூலமோ தொடர்பு கொண்டு குணமடையுங்கள்.

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

Tel : "THASBI" **USE ALWAYS** Phone: 23379

Gemini

**LUNGIES &
HANDKERCHIEVES**

ஜெமினி லுங்கி கோ
1/15, ராமசாமி தெரு, மதராஸ்-1.

சில்லரையில் கிடைக்குமிடம்

1. ராதா சில்க் எம்போரியம்
'தன் பில்டிங்'
மவுண்ட்ரோடு, சென்னை-2.

2. ஸ்ரீராம் டெக்ஸ்டைல்ஸ் கோ,
2, தம்பு செட்டி தெரு,
சென்னை-1.

வெளியூர் ஆர்டர்களை உடனடியாக அனுப்பிவைக்கப்படும்.

படித்துப் பட்டம் பெற்றது எதற்காக? பஞ்சாலையிலே மாடு போல் உழைக்கவா? ஒரு நாள் வயிற்றை நிரப்புவதற்காகவா ?

அவர் வேலை நீக்கம் செய்ததும் சரிதான் ! என் ஆயுளை ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவிட முடியும் !

படித்தவர்கள் ஆமையாய்க் கிடந்தால் படிக்காத பாமரர்கள் என்ன செய்வார்கள் ? இந்த முதலாளி வர்க்கங்களுக்கு ஒரு முடிவு கட்டி தொழிலாளிகளின் வாழ்வுக்காக காலமெல்லாம் போராடுவதுதான் இனி என் இலட்சியம் ! வீரமணியின் உள்ளம் சிந்தனையோடு உறவாடிக் கொண்டிருந்தது !

''என்னத்தான் ! ஒரே சிந்தனையிலேயே இருக்கிறீர்கள்'' என்று பக்கத்தில் உட்கார்ந்திருந்த விமலா கேட்டாள் !

ஓ, நீ பக்கத்தில் இருக்கிருயா?'' என்ருன் வீரமணி !

''நான் இருப்பதுகூட உங்களுக்குத் தெரியவில்லையா அத்தான் !''

''ஆமாம் விமலா ! நீ இருப்பது மட்டும் அல்ல, இந்த உலகம் இருப்பதே என் கண்களுக்குத் தெரியவில்லை !

''ஏன் அப்படி ? நான்தான் என்ன செய்தேன்? இந்த உலகம்தான் என்ன செய்தது ?''

''எங்கள் வாழ்வு பறிபோனதற்கே நீயும் இந்த உலகமும் தானே காரணம் ?''

''இன்னெரு தடவை அப்படிச் சொல்லாதீர்கள் ! நீங்கள் கோழையாய், வாயில்லாப் பூச்சியாய் இருந்தால் அதற்குக் காரணம் நானும் இந்த உலகமும்தானு? விமலா உணர்ச்சியோடு பேசினுள் !

''உன் அப்பனிடம் பணம் இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது ! எங்களால் என்ன செய்ய முடியும்! ஏதாவது கேட்டால் துப்பாக்கியால் சுடுகிருர்களே !'' என்ருன் வீரமணி !

''நீங்கள் ஒன்றுபட்டால் அவருடைய பணம் உங்களை என்ன செய்யும் ?''

''அப்படியானுல்நீ என்ன சொல்லுகிருய்?'' விமலாவைப் பார்த்து வீரமணி கேட்டான் !

''என் தந்தையை எதிர்த்து தேர்தலில் போட்டி போடுங்கள், வெற்றி பெறுங்கள்! ஆட்சி உங்கள் கைக்கு வந்தால் ஏழைகள் வாழ்வு தன்னாலே மலர்ந்து விடுகிறது!''

''இது நடக்கக் கூடிய காரியமா?'' வீர மணி விமலாவைப் பார்த்துக் கேட்டான்!

''மனிதன் நினைத்தால் எதைத்தான் செய்ய முடியாது! நான் பக்கத் துணையாக நின்று பணி புரிகிறேன்! இன்று முதலே உங்கள் வேலையை ஆரம்பியுங்கள்!''

இது உண்மைதானா விமலா?''

அப்படிக் கேட்பதற்காக நான் வெட்கப்படு கிறேன்! எனக்கு ஏழைகள் வாழ்வுதான் முக்கியம்! நீங்கள் தான் முக்கியம்! நான் உங்களை விரும்புவது எதற்காக? உங்கள் நல்ல இலட்சியத்திற்காகத்தான்! இதை என்றும் மறந்து விடாதீர்கள்!''

வீரமணி விமலாவைக் கட்டித் தழுவிக் கொண்டான்! ''நீ ஒரு இலட்சியப் பெண், உன்னைக் காதலியாகப் பெற்ற பாக்கியமே பாக் கியம்!'' என்று கூறினான்!

''உங்களிடத்தில் உறுதியில்லை! அதற்காக நான் பயப்படுகிறேன்!''

''காரணம்?'' வீரமணி ஆச்சரியத்தோடு கேட்டான்!

உங்களுடைய இலட்சியமும், குறிக் கோளும் நிறைவேறி தொழிலாளிகளுக்கு வாழ் வளித்த பின்புதான் என்னைத் தொடுவதாகச் சத்தியம் செய்துக் கொடுத்தீர்கள்! நினைவிருக் கிறதா?

சில்வர் கிரவுன் இண்டஸ்ரீட்ஸ்
23, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.

இனிமேல் தான் இலட்சியம் நிறைவேறப் போகிறதே !

வெற்றிக்குப் பின்பு எனக்கு மாலே சூட்டுங்கள் ! அப்போதுதான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும் !

"பெண் என்ருல் நீயல்லவா பெண்!" என்று சொல்லிக் கொண்டே விமலாவை மீண்டும் கட்டி அணேக்கச் சென்ருன் ! விமலாவோ உறுதியோடு இருங்கள்" என்று கூறி வீரமணியின் கையை உதறிவிட்டு விமலா வீட்டிற்குப் புறப்பட்டாள் !

3

மோகனூர் மில் முதலாளி சொக்கநாதம் பிள்ளே என்ருல் தெரியாதவர்களே இருக்க முடியாது !

அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கதர் குல்லாய் அணிவதற்கு முன்பு கையில் அரைக் காசும் இல்லாமல் ஆண்டியாய் திருவோடேந்தி பிழைத்து வந்தார் ! காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து மேடை தோறும் சோஷலிசக் கொள்கையை முழங்க ஆரம்பித்த பிறகு சொக்கநாதம் பிள்ளே பல இலட்சத்திற்கு அதிபதியானுர் !

இப்போது கார், பங்களா, பஞ்சாலே மில் அத்தனேயும் சொந்தமாயிற்று !

இத்தனேயும் பறி போய் விட்டால் என்ன செய்வது என்ற ஏக்கம் சொக்கநாதம் பிள்ளேயை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது !

சோபாவில் சாய்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த சொக்கநாதம் பிள்ளே திடீரென்று எழுந்து உட்கார்ந்து—"டேய் சம்பத்து இங்கே வாடா" என்று தன் வேலேக்காரனேக் கூப்பிட்டார் !

வேலேக்காரன் சம்பத்து பயபக்தியோடு ஓடி வந்து—என்ன எஜமான்" என்று கேட்டான்!

மில்லிலே நடந்த விஷயம் உனக்குத் தெரியுமா" என்ருர் சொக்கநாதம் பிள்ளே !

"ஊரே இதைப்பற்றித்தானே பேசுதுங்க!"

"என்னடா ஊரே பேசுது ?"

பாவம் ! தர்மகர்த்தாவாயிற்றே, அவருக்கா இந்த கதி ஏற்படவேண்டும்" என்று ஊரே பரிதாபப்படுகிறது எஜமான் !"

"ஏண்டா சம்பத்து! அப்படியானல் ஜனங்க நமக்கு தானே ஓட்டுப் போடுவாங்க ?"

நீங்கள் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற

சிறந்த தமிழ் நூல்கள்

அறிஞர் அண்ணுவின்

அரிய படைப்புக்கள்—

அண்ணுவின் தம்பிக்குக் கடிதங்கள் முதற் பகுதி	ரூ.	1—50
அண்ணுவின் தம்பிக்குக் கடிதங்கள் இரண்டாம் பகுதி	ரூ.	1—50

மற்ற பகுதிகளும் விரைவில் வெளிவரும்.

தகழி சிவசங்கரப் பிள்ளேயின்

இனிய நாவல்

செம்மீன் (தமிழ்)	ரூ.	4—00

சிறந்த தமிழ் இலக்கிய நூல்கள்

தெளிவுரையுடன்

புலியூர் கேசிகன் இயற்றியவை

மணிமேகலே	ரூ.	2—50
சிலப்பதிகாரம்		3—00
நளவெண்பா		1—50
கலிங்கத்துப் பரணி		2—00
தொல்காப்பியம்		3—00
புறப்பொருள் வெண்பா மாலே		2—50
கலித்தொகை		3—00
குறுந்தொகை		3—50
நற்றிணே முதற் பகுதி		2—50
அகநானூறு - மூன்று பகுதிகள்		8—00

பாரி நிலேயம்

59, பிராட்வே, சென்னே-1.

“இதிலே என்னங்க சந்தேகம்? நம்மிடம் பணம் இருக்குது! கத்தை கத்தையாக எறிந்தால் கதறிக்கிட்டு ஓட்டு விழுங்க!

“பஞ்சப் பசங்க பேச்சாலே மயக்கிட்டா? என்னடா செய்ய முடியும்?”

“நீங்க ஒண்ணு! பேச்சிலே மயங்கிறதுக்கு இப்ப ஆள் இல்லே! பணம் இருந்தால் பத்தும் செய்யலாம் எஜமான்!”

“அப்படியானுல் நீ தான் இதற்கு வழி செய்ய வேண்டும்!”

“ஒரு லானுலைவத் தள்ளுங்க! நிச்சயமாக நீங்க ஜெயிக்கலாம்!”

ஒரு இலட்சம் என்ன பத்து இட்சம் தரு கிறேன்! அந்தப் பசங்களை விலை கொடுத்தே வாங்கிவிடு!

“நல்ல யோசனை எஜமான்!“சம்பத்து சொக்கநாதம் பிள்ளையின் காலைப் பிடித்துக் கொண்டே சொன்னுன்!

“ஏண்டா சம்பத்து! இந்த வீரமணிக்கு ஒரு இலட்சம் கொடுத்தால் போதுமா?”

“போதுங்க! ஆனு?”

“என்னடா ஆனு, ஆவன்னு?”

“நான் சொன்னு என்மேல் தப்பா எதுவும் நினைக்க மாட்டிங்களே!” சம்பத்து பயப்படு வது போல் பாசாங்கு செய்தான்!

“அந்த வீரமணிக்கு இடம் கொடுத்ததே நம்ம சின்னம்மாதாங்க!”

“சின்னம்மாவா? யார் என்னுடைய மகள் விமலாவா?”

“ஆமாங்க எஜமான்!”

சொக்கநாதம் பிள்ளை ஆவேசத்துடன் எழுந்து “விமலா, விமலா” என்று கத்தினுர்!

“சின்னம்மா வீட்டிலே இல்லிங்க!”

“எங்கே போயிருக்காள்?”

“தெரியலிங்க!”

“வரட்டும் சொல்லுகிறேன்!” என்று சொக்கநாதம் பிள்ளை முணுமுணுத்துக் கொண்டிருந்தார்!



4

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய கார் வந்து அங்கே நின்றது! விமலா அந்தக் காரை விட்டு இறங்கி ஓடிவந்து தன் தந்தை சொக்கநாதம் பிள்ளையை "அப்பா" என்று கட்டி அணைத்துக் கொண்டாள்!

"தொடாதே! போ உள்ளே" என்று சொக்கநாதம் பிள்ளை அதட்டினர்! விமலாவும் வாயை மூடிக்கொண்டு உள்ளே நுழைந்தாள்! உறுமும் புலியைப் போல சொக்கநாதம் பிள்ளையும் உள்ளே நுழைந்தார்!

"ஏய் விமலா! பத்து மணி வரை எங்கே போயிருந்தாய்?" சொக்கநாதம் பிள்ளை விமலாவை அதட்டினர்!

"கடற்கரைக்குப் போயிருந்தேன்!"

"எதற்கு?"

"காற்று வாங்க!"

"காற்று வாங்கவா? கள்ளக் காதல் புரியவா?" சொக்கநாதம் பிள்ளையின் கண்களில் கோபக்கனல் பறந்தது!

கள்ளமார்க்கெட்காரர்களுக்கு எல்லாவற்றிலுமே கள்ளத்தனம் இருப்பதாகத்தானே தெரியும்!" விமலாவுக்கும் கோபம் வந்து விட்டது!

"நானா கள்ளமார்க்கட் செய்கிறேன்?" சொக்கநாதம் பிள்ளையின் உதடு துடித்தது!

இதோ மாட்டி இருக்கும் காந்தி படத்தின் மீது ஆணையிட்டுச் சொல்லுங்கள், உங்கள் தலையிலே மாட்டி இருக்கும் கதர் குல்லாய் மீது ஆணையிட்டுச் சொல்லுங்கள், நீங்கள் சுத்தமானவரா? தூய உள்ளம் படைத்தவரா?" விமலா உணர்ச்சியோடு பேசினள்!

"நீயே என்னைக் காட்டிக் கொடுக்கிருய்! இல்லையா?"

"ஆமாம்! ஏழைகளின் வயிற்றில் அடித்து, இலட்சம் இலட்சமாகப் பணம் சேர்த்து வாழ்வதும் ஒரு வாழ்வா?

அப்படியானல் என் மில்லையே எழுதி வைக்கச் சொல்லுகிருயா?

"அப்படித்தானே உங்கள் ஜனநாயக சோஷலிசம் கூறுகிறது!"

22 காரட்

அலிமா
தங்க கவரிங் நகைகள்
உபயோகித்தப்பின்பும் பாதிப்பணம் பெறும் நிபந்தனையுடன்



புதிய கேட்லாக் வேண்டுவோர் 25 NP ஸ்டாம்ப் அனுப்பவும்
மாதத்தவணையில் சென்னைவாசிகளுக்கு மட்டும்
அலிமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்
No. 3. ரங்கநாதன் தெரு, (மாம்பலம் – ரயிலடிக்கு) மிக அருகாமையில். சென்னை.17
போன். 42715

அறிஞர் அண்ணா, எம். ஜி. ஆர்.
உருவமுள்ள ஸ்பெஷல் மோதிரம்!
இருவண்ணத்தில் தயாரிக்கப்பட்டது!
விலை ரூ. 3-50. தபால் செலவு ரூ. 1-25.
ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பினல் வி.பி.பி, யில் அனுப்பப்படும்.

"இல்லை! ஒவ்வொருவரும் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் ஜனநாயக சோஷலிசம்!"

"இப்படிப் பித்தலாட்டப் பேச்சு பேசாதீர்கள்! ஊர் மக்கள் விழித்துக் கொண்டுவிட்டார்கள்!

"சரி! நீ என்னையும் மிஞ்சி விட்டாய்? நடப்பது நடக்கட்டும்! எல்லோருக்கும் பாடம் கற்பிக்கிறேன் பார்" என்று கூறிக் கொண்டே சொக்கநாதம் பிள்ளை வெளியேறினுர்!

5

சொக்கநாதம் பிள்ளையின் மில் மூன்று மாதமாக மூடியே கிடந்தது! தொழிலாளிகள் வறுமையோடு போராடிக் கொண்டிருந்தாலும் உறுதியோடு வேலை நிறுத்தத்தைச் செய்துக் கொண்டிருந்தார்கள்!

தொழிலாளியின் ஆட்சியை அமைத்து தொழில்களை தேசியமயமாக்கி எல்லா தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டும் என்ற இலட்சியத்தையும் மேற்கொண்டிருந்தார்கள்!

சொக்கநாதம்பிள்ளை மில்லில் மேனேஜராக வேலை பார்த்து இப்போது வேலையிலிருந்து நீக்கப்பட்ட வீரமணியை தேர்தலில் நிறுத்தி வைப்பது என்ற முடிவுக்கும் வந்தார்கள்! தொழிலாளிகள் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் வசூல் செய்து வீரமணியிடம் தேர்தல்நிதியளித்தார்கள்!

சொக்கநாதம் பிள்ளையும் பணத்தை நம்பி தேர்தலில் போட்டியிட்டார்!

சொக்கநாதம் பிள்ளையை எதிர்த்து வீரமணி போட்டியிட்டான்!

சொக்கநாதம் பிள்ளை காளை மாட்டுச் சின்னத்திலும், வீரமணி உதயசூரியன் சின்னத்திலும் போட்டியிட்டனர்!

சொக்கநாதம் பிள்ளைக்காக வேலைக்காரன் சம்பத்து நோட்டு கத்தையோடு வீடு வீடாகப் புகுந்து ஓட்டுக் கேட்கத் தொடங்கினுன்!

வீரமணிக்கோ விமலாவும், தொழிலாளிகளும் ஓட்டுக் கேட்டனர்!

விமலா மேடை ஏறி ஆட்சியின் அக்கிரமத்தையும், தன் தந்தையின் துரோகச் செயலையும் மேடையிலே விளக்கிக் கூறும்போது எல்லோருமே கண்கலங்கிப் போய்விட்டார்கள்!

"என் தந்தை சோஷலிசம் பேசுகிருர்! ஆனுல் தொழிலாளிகளுக்கு மட்டும் சோறு போடுவதில்லை! இதற்குப் பெயர் சோஷலிசமா? நீங்களே சொல்லுங்கள்" என்று விமலா மேடையிலே பேசும்போது—மக்கள் "இல்லை இல்லை" என்று குரல் எழுப்பி கரகோஷம் செய்து "எங்கள் ஓட்டு உதயசூரியனுக்கே" என்று முழங்குவார்கள்!

இப்படி வீரமணிக்கு ஆதரவு வலுத்து வந்தது!

தேர்தல் நாளன்று ஆண்களும், பெண்களும் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்து உதயசூரியனுக்கு ஓட்டளித்தனர்!

தேர்தல் ரிசல்ட்டு அறிவிக்கும் நாள் வந்தது! விமலாவும் தொழிலாளிகளும் ஆயிரக் கணக்கில் கூடி இருந்தனர்!

அதேபோல் சொக்கநாதம் பிள்ளையின் ஆட்களும் வந்திருந்தனர்! வேலைக்காரன் சம்பத்து மட்டும் ஆள் உயரத்திற்கு ரோஜாப்பூ மாலையோடு வந்திருந்தான்!

மாலை ஐந்து மணிக்கு இருபதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வீரமணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது!

விமலாவும் தொழிலாளிகளும் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்!

விமலா ஒரு பெரிய மாலையை வீரமணிக்குச் சூட்டினுள்! இந்த வெற்றிக்குக் காரணம் நீ தான்! எனவே நான்தான் உனக்கு மாலை சூட்ட வேண்டும் என்று கூறி தன் கழுத்தில் கிடந்த மாலையை அவளுக்குச் சூட்டினுன்!

தொழிலாளிகள் வீரமணியை தோளில் தூக்கிக்கொண்டு ஆனந்தபள்ளு பாடி ஊர்வலம் வந்தனர்!

6

வீரமணி வெற்றி பெற்றது போலவே நாடெங்கிலும் எதிர்க்கட்சி பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றது! சொக்கநாதம் பிள்ளையின் கட்சி படுதோல்வியடைந்தது!

வெற்றி பெற்ற எதிர்க்கட்சியை கவர்னர் அழைத்து மந்திரி சபையை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார்!

நாட்டில் எதிர்க்கட்சியின் மந்திரி சபையும் அமைந்தது ! வீரமணி தெழிலாளர் பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்பட்டார் ! தொழிலாளிகளுக்கும், விமலாவுக்கும் இந்தச் செய்தி பெருமகிழ்ச்சியை ஊட்டியது !

மந்திரிசபை முதல் கூட்டத்திலேயே பெரிய தொழில் ஸ்தாபனங்களையும், ஆலைகளையும் தேசியமயமாக்க வேண்டும் என்று கொண்டு வந்த மசோதா நிறைவேறியது !

அதன்படி சொக்கநாதம் பிள்ளையின் பஞ்சாலையும் தேசிய உடமையாக்கப்பட்டது! இந்தச் செய்தியைக் கேட்டு தொழிலாளர்களும், விமலாவும் ஆனந்தக் கூத்தாடினார்கள் !

தொழிலாளர் பாதுகாப்பு மந்திரி வீரமணியைத் தொழிலாளிகள் அழைத்து ஒரு பாராட்டு விருந்து வைத்தனர் !

முதலில் வீரமணிக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது !

கனம் அமைச்சர் வீரமணிக்கும், திருமதி வீரமணிக்கும் இந்த பஞ்சாலை சார்பில் மாலை அணிவிக்கிறோம் என்று ஒரு தொழிலாளி மாலை அணிவித்த போது கரகோஷம் வானைப் பிளந்தது !

அமைச்சர் வீரமணி நன்றியுரை கூறினார் !

உங்களால் நான் வெற்றி பெற்று வந்திருக்கிறேன் ! தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக நான் எல்லா வகையிலும் பாடுபடுவேன் ! போலி சோஷலிசவாதிகள் ஒழிந்து உண்மையான சோஷலிசம் மலர்ந்த இந்த நாள்தான் நாட்டுக்கு மட்டும் அல்ல, தொழிலாளிகளுக்கே புனிதத் திருநாளாகும் என்று கூறினார் !

இந்தச் செய்தி சொக்கநாதம் பிள்ளைக்கு எட்டியது ! நெஞ்சைப் பிடித்துக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்டார் ! சிறிது நேரத்திற்கெல்லாம் அவரது ஆவி பிரிந்தது !

வீரமணியும், விமலாவும் பதறிப் போய் அங்கே ஓடினார்கள் ! விமலா அப்பா அப்பா என்று கதறினாள் ! வீரமணியின் கண்களிலும் நீர்த் துளிர்த்திருந்தது !

★

எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள் !



மக்கள் திலகம்

தயாரிப்பு :

என். எஸ். கே. டிரேடிங் கம்பெனி

36, பாரிஷ்வெங்கடாசலஐயர்தெரு, மதரூஸ்-1.

எல்லோருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள் !

வீட்டிற்கும் வியாபாரத்திற்கும்

வரும் விருந்தோம்ப......

வாய்க்குச் சுவையான

சிற்றுண்டிகள் தயாரிக்க......

லோட்டஸ் சேமியா

வாங்குங்கள்

★

லோட்டஸ் சேமியா கம்பெனி,

81, ஜி. ஏ. ரோடு, சென்னை-21.

எல்லோருக்கும் எமது

பொங்கல் வாழ்த்துக்கள் !

கைத்தறித் துணிகளுக்கு சிறந்த இடம்.

TRADE MARK

UNICORN

பளபளப்பிற்கு,
நீண்ட கால உழைப்பிற்கு,
மங்காத சாயத்திற்கு,
உத்திரவாதம் அளிப்பவை

இன்றே வாங்குங்கள் !

தயாரிப்பாளர்கள்

பிஸ்மில்லா பழயகாட் கம்பெனி

72, அங்கப்ப நாய்க்கன்தெரு, சென்னை-1.

20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் போடப்பட்ட கொடுமையான வரிகள்!

காங்கிரஸ் ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும் என்பதற்கு ஆயிரமாயிரம் காரணங்கள் உண்டு!

விலைவாசி ஏறிவிட்டதே என்று மக்கள் பக்கத்தில் நின்று காங்கிரஸ்காரர்களும் ஒப்பாரி வைக்கிறார்கள்! இதற்குக் காரணம் யார்? காங்கிரஸ் சர்க்கார்தானே?

விலைவாசிகள் ஏறியதற்கு முக்கிய காரணம் போட்ட வரியும் ஒன்றாகும்! இவ்வளவு வரி போடாவிட்டால் இப்படி விலைவாசி உயர்ந்திருக்காது என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்ளுவார்கள்!

கொலைகார ஆட்சியை நிச்சயமாகத் தூக்கி எறிவார்கள் என்பதில் கொஞ்சமும் ஐயப்பாடு இருக்க முடியாது!

1947-ல் வெள்ளைக்காரன் வெளியேறிய பின்பு—சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜெட்டில் அதாவது 1948-1949ல் தீட்டப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் போட்ட மொத்த வரி 379 கோடி ரூபாயாகும்!

இந்த ஆண்டு—அதாவது 1966-67ல் போடப்பட்டிருக்கும் மொத்த வரி 2719 கோடியாகும்!

1948ல் விதித்த வரி 379 கோடி!

1966-ல் விதித்த வரி 2719 கோடி!

இந்த இருபதாண்டு காலத்தில் போட்ட வரிகளை கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் நம்முடைய நெஞ்சம் சுக்கு நூறாக உடைந்துவிடும்! இந்த ஆட்சியின் அக்கிரமச் செயல்களைப்பற்றி எண்ணி எண்ணி நல்லவர்கள் உயிரையே விட்டு விடுவார்கள்!

காங்கிரஸ்காரர்கள் எப்படி எப்படி வரிகளைப் போட்டு ஏழைகளை வாட்டி வதைத்து வருகிறார்கள் என்பதை சாதாரண மக்கள் அறியாத காரணத்தால்தான் இந்த ஆட்சி இருபதாண்டு காலமாக நிலைத்து வருகிறது!

எனவே கழகத் தோழர்கள் காங்கிரஸ் சர்க்கார் போட்ட கொடுமை நிறைந்த வரிகளை பொதுமக்களிடம் விளக்கிக் காட்ட வேண்டுகிறோம்! அப்படி விளக்கிக் காட்டினால் இந்த

முன்னூற்றி எழுபத்தி ஒன்பது கோடி எங்கே? இரண்டாயிரத்தி எழுநூற்றி பத்தொன்பது கோடி எங்கே? எத்தனை பங்கு வரி உயர்ந்திருக்கிறது? இதைப்பற்றி பொது மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

இந்த வரிகளில் பெரும்பாலும் ஏழை மக்களும், நடுத்தர மக்களும்தான் கட்டுகிறார்கள்!

வரிகளில் மிக முக்கியமான வரி கலால் வரியாகும்! இந்த கலால் வரி மட்டும் 20 பங்கு உயர்ந்திருக்கிறது!

விடுதலை கிடைத்த முதல் ஆண்டில்—அதாவது 1948-49ல் இந்திய சர்க்கார் விதித்த கலால் வரி 51கோடி ரூபாயாகும்!

அன்று தீப்பெட்டிக்கு வரி 7·30 கோடி !

இன்று 24 கோடி !

1966-67ல் விதிக்கப்பட்டிருக்கும் கலால் வரி 1012 கோடி ரூபாயாகும் !

கலால் வரி என்று பொதுவாகப் பார்க்காமல் தனித்தனியாகப் பார்த்தால் ஏழைகள் எவ்வளவு வரிகளைக் கட்டுகிறார்கள் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும் !

எண்ணெய் மீது போடப்படும் வரிகள் மட்டும் அநியாயமாக உயர்த்தப்பட்டிருக்கிறது !

எண்ணெய் மீது விதிக்கப்பட்ட வரி 1948-ல் 1 கோடியே 41 இலட்சமாகும் ! இப்பொழுது 90 கோடியே 86 இலட்சமாகும் !

ஏழைகள் பயன்படுத்தும் தீப்பெட்டிகள் மீது 1948-49ல் போடப்பட்ட வரி 7 கோடியே 30 இலட்சம் !

இப்போது தீப்பெட்டிக்கு விதிக்கப்பட்டிருக்கும் மொத்த வரி 24 கோடி ரூபாயாகும் !

1949-ல் சர்க்கரைக்கு போடப்பட்ட வரி 6 கோடியே 47 இலட்சம் ரூபாய் !

இதே சர்க்கரைக்கு இந்த ஆண்டில் போடப்பட்டிருக்கும் வரி 23 கோடியே 50 இலட்சமாகும் !

குடிசைகளில் ஏழை மக்கள் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் மீது 1948-49ல் போடப்பட்ட வரி வெறும் இருபது இலட்சம் ரூபாய் தான் !

இப்போது அதே மண்ணெண்ணெய்க்குப் போடப்பட்டிருக்கும் மொத்த வரி 77 கோடியே 44 இலட்சமாகும் !

சாதாரண இருபது இலட்சம் எங்கே? 77 கோடியே 44 இலட்சம் எங்கே? ஏழை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் ! 387 பங்கு மண்ணெண்ணெய்க்கு வரி உயர்ந்திருக்கிறது !

இவர்களா ஏழை பங்காளர்கள் ! இவர்களா ஜனநாயக சோஷலிசத்தை மலர வைக்கப் போகிறவர்கள்! சிந்தித்தால் இவர்களைப்பற்றிய உண்மையைப் புரிந்து கொள்ள முடியும் !

ஏழைகள் உடுத்திக் கொள்ளும் பஞ்சினால் நெய்யப்பட்ட துணிகள் மீது 1949-ல் விதிக்கப்பட்ட வரி 87 இலட்சம் ரூபாயாகும் ! இப்போது 66 கோடியே 15 இலட்சமாகும் !

ஏழைகள் கட்டும் துணிக்கு இவ்வளவு வரியா? ஏழை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் !

ஒரு பக்கத்திலே வரிக் கொடுமை உயர்ந்து கொண்டே போகிறது ! மறுபக்கத்திலே பண வீக்கம் ஏற்பட்டு மதிப்பு குறைந்து விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது ! இந்த நிலையில் ஏழைகளால் எப்படி வாழ முடியும் என்பதை யோசித்தால் இந்த ஆட்சி இந்த நாட்டில் நிலைக்க முடியுமா?

சர்க்கார் ஏழைகள் பயன்படுத்தும் உணவும் பொருள்கள் மீது வரி விதிக்கிறது என்றால் இந்த ஆட்சி ஏழைகளின் ஆட்சியா?

மீண்டும் மீண்டும் இந்த வரிப் பட்டியலைப் படித்துப் பாருங்கள் ! இந்த ஆட்சி தேவை தானா என்று சிந்தித்துப் பாருங்கள் ! 1967-ல் நல்ல தீர்ப்பளியுங்கள் !

★

அன்று மண்ணெண்ணெய் வரி 20 லட்சம் !

இன்று 77 கோடியே 44 இலட்சம் !

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும்
உலோகங்கள், அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்கள்
சேர்த்து உருவாக்கிய

★  ★

டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளையின்

சித்தர் நவலோக கல்பம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

தொலைபேசி: 84786

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

கிளை வைத்தியசாலை :

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

**ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) டி. பி.; குஷ்டம், வெண்குஷ்டம், யானைக்கால்
மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கு**

பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி சனிக்கிழமைகளில் மாமண்டூரிலும்

டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளை அவர்களைக் கலந்து குணம் பெறலாம்.

அன்றும், இன்றும், என்றும்
நீங்கள் விரும்பி வாங்கும்

சங்கு மார்க்

இதுதான்

கைத்தறி லுங்கிகள், கைக்குட்டைகள், சோளிகள் மற்றும் புடவைகள்



முகம்மது அபுபக்கர் & கம்பெனி
95, தம்பு செட்டித் தெரு, சென்னை - 1
கிளைகள் : மதுரை — கல்கத்தா — கொல்லம்
பம்பாய்

Criterion-MAB-684

ஆசிரியர், உரிமையாளர், வெளியிடுபவர், அச்சிடுபவர் பி. எஸ். இளங்கோ 17, மில்லர்ஸ்ரோடு, சென்னை-10. அச்சிட்டது அமிர்தம் பிரிண்டர்ஸ், 59-1, வாலாஜா ரோடு, சென்னை-2.

(இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது)
பதிவு எண். எம். 7074
MALAIMANI SPECIAL NUMBER



நூதன முறையில் தயாரித்த - அழகி...

மோதிரங்கள் லாக்கட்டுகள்

22 காரட் கோல்டு கவரிங் செய்த அறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., உதய சூரியன், உருவங்கள் பதித்த அக்ரலிக் சீட்டில் தயாரித்த அழகிய மோதிரங்கள், லாக்கட்டுகள்.

No. 10 அறிஞர் அண்ணா மோதிரம்	ரூ.	6-50
No. 24 எம். ஜி. ஆர் மோதிரம்	ரூ.	6-50
No 25 உதய சூரியன் மோதிரம்	ரூ.	10-50
No. 26 அறிஞர் அண்ணா லாக்கட்	ரூ.	7-50
No 27 எம். ஜி. ஆர் லாக்கட்	ரூ.	7-50

No54 உதய சூரியன் லாக்கட் ரூ. 10.50

தபால் செலவு ரூ. 1·50 விற்பனை வரி தனி.

(1) உதய சூரியன் மோதிரத்தில் உங்கள் பெயரை பதித்துக்கொடுக்கிறோம். உங்கள் பெயரை ஆங்கிலத்தில் தனித்தனி எழுத்தாக எழுதவும் தமிழ் எழுத்துக்கள் வராது.

(2) உங்களுக்கு எந்த மோதிரம் அல்லது எந்த லாக்கட் வேண்டுமோ அதன் நெம்பரை மட்டும் குறிப்பிட்டு விரல் அளவை நூலில் எடுத்து அனுப்பவும். அல்லது நூலின் அளவை எழுதவும் (3) ஒரு மோதிரம் அல்லது லாக்கட்டுக்கு ரூ. 3-00 வீதம் அட்வான்ஸ் அனுப்பவும். மீதித் தொகைக்கு V.P.P. அனுப்புகிறோம். முழுத்தொகைக்கு V.P.P. அனுப்ப இயலாது.

GOLD DEALARS L.No. 187/65

G.சம்பந்தன்

ஸ்பெஷலிஸ்ட்
பேன்ஸி ஆபரணங்கள், தயாரிப்பாளர்.
176/1, பெரிய தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-5 (S. இந்தியா)

Wrapper Printed at Kasturi Litho Works 2/142, Mount R...d Madras-6.